Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்



# கண்ணோட்டம்

KANNODDAM

வெளியீடு :- 71 | 10 மே 2016 | விலை ரூபா :- 10.00

# நழுவிப் போய்விடக் கூடாத சந்தர்ப்பம்

## 2015 ஜனவரி 8 இற்குப் பிறகு பயங்கரவாதத் தடைச்சட்டம் நீடித்து நிலவுவதும், வெள்ளைவான் கலாச்சாரம் நீடிப்பதாக மக்கள் தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வதும், வன்முறை அராஜகம் தாண்டவமாடுவதும், தொழிலாளர்கள் - மாணவர்கள் - இளைஞர்கள் அமைதியற்றிருப்பதும் நாட்டிற்கு நல்லதல்ல.

புதிதாகப் பதவியேற்ற அரசு மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்வதில் அரசியல் யாப்பை மறுசீரமைப்பதில் அக்கறை செலுத்தியிருக்கிறது.

ஆனால், மக்களின், சமூக, பொருளாதார அபிலாசைகளை முன் கொண்டு செல்வதில் நிலவும் தடைகள், சவால்கள் எவை என்பதை விளங்கி துரிதமாகச் செயற்பட வேண்டும்.

மக்கள் அவநம்பிக்கை விரக்தியின் எல்லைக்குச் செல்லாத அளவிற்கு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசியல்வாதிகள் பலரின் உதிரித்தனமான சுயநலன்களுக்கும் மக்களின் அபிலாசைகளுக்கும் இடையே ( தொடர்ச்சி 11 ம் பக்கம் )

## பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்

### கட்சிக் காங்கிரஸ் மார்ச் 30, ஏப்ரல் 02, 03 – 2016




இலங்கையின் அனைத்து இன மக்களும் உண்மையான சுதந்திரங்களுடனும் சமாதானமாகவும் செழிப்பான வாழ்க்கையை நோக்கி முன்னேறுவதற்கு நிரந்தரமான அரசியற் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அதற்கு இலங்கையின் அரசாட்சி அமைப்பு ஒரு கூட்டாட்சி குடியரசு அமைப்பாக பரிணாமமடைய வேண்டும் எனவும் அதற்கு அனைத்து அரசியல் சமூகத் தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதும் இவ் அரசியற் திட்டப் பிரகடனத்தின் முதலாவது தீர்மானமாகும்.

கைதிகள், காணாமற்போனவர்கள், இடம் பெயர்ந்தவர்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், பெண்கள், மீனவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகிய பல்

( தொடர்ச்சி 11 ம் பக்கம் )

## தோழர் கார்ல் மார்க்ஸ்

### பிறந்த தினம் – 05 மே 1818



"உலகத்தின் உடமைகள் அனைத்தும், மக்கள் அனைவருக்கும் பொதுவானவை. அவற்றை காலப்போக்கில் சில வசதி படைத்த மனிதர்கள், தங்கள் தனியுடமையாக்கிக் கொண்டனர். தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி, முதலாளிகள் வளர்கின்றனர். அதனால்தான் இருப்பவர்கள் சிலரும், இல்லாதவர்கள் பலருமாக சமுதாயம் மாறி வருகிறது. இந்த நிலை மாற வேண்டும்."

**தோழர் கார்ல் மார்க்ஸ்**

## வெயில்

தற்போதைய வெப்பமான கால நிலை பொதுவாக இந்திய உப கண்டம் முழுவதும் காணப்படுகிறது.

பிகாரில் பகலில் தீப்பற்றவைக்க வேண்டாம் சமையல் செய்ய வேண்டாம் என்று அரசினால் அறிவுறுத்தபட்ள்ளது. எமது பிரதேசங்களில் இப்போது நிலவும் வெய்யில் தமது அனுபவத்தில் இல்லாதது என்கிறார்கள் முதியவர்கள்.

மாரிகாலத்திற் பெரு வெள்ளம் புயல் கோடை காலத்தில் வெப்பநிலையின் மித

( தொடர்ச்சி 11 ம் பக்கம் )

## வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக தீர்மானம்

புதிய அரசியலமைப்பில் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் யோசனைக்கு ஏ.எல்அத்தாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற தேசிய காங்கிரசின் 125 வது பேராளர் மாநாட்டில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

( தொடர்ச்சி 8 ம் பக்கம் )

## சமஸ்டி தீர்வு

### பிரிவினைக்கு வழிவகுக்கும்

நாட்டில் சமஸ்டி ஆட்சி ஏற்படுத்தப்படுமானால் வடக்கில் தமிழ் இனவாதமும் தெற்கில் சிங்கள இனவாதமும் தலைதூக்கும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படாது பிரிவினைக்கான சாத்தியம் அதிகரிக்கும் என ஜே.வி.பி தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி கட்சியின் தலைமையகத்தில் ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

( தொடர்ச்சி 8 ம் பக்கம் )




## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மேதின அறைகூவல்

மேதினம் ஒடுக்கப்பட்ட மக்களின் தினம். சமூக பொருளாதார ரீதியில் இம் மக்களின் வாழ்க்கைநிலை பொதுவாக இலங்கையிலும், குறிப்பாக வடக்கு-கிழக்கிலும் எவ்வாறிருக்கிறது? வடக்கு- கிழக்கைப் பொறுத்தவரை பாராளுமன்றம், மாகாணசபைகள், உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதித்துவத்தை, ஆட்சிப் பொறுப்பை கைகளில் வைத்திருக்கும் தமிழ் அரசியல் தலைமை சாதாரண மக்களின் அபிலாசைகள் தொடர்பாக என்ன செய்கிறார்கள்? செய்திருக்கிறார்கள்?

எமது கிராம, நகரங்களில் வறுமை கோரத்தாண்டவம் ஆடுகின்றது. விலைவாசி வானத்தில் ராக்கெட்டாகப் பறந்து கொண்டிருக்கிறது. சாதாரண மக்கள்

( தொடர்ச்சி 7 ம் பக்கம் பார்க்க )

துயருடன் இலண்டன் கடிதம் பக்கம்-04



தோழர்களை நினைவு கூருவோம் பக்கம்-07



கட்சி காங்கிரஸ் தீர்மானம் பக்கம்-09



தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம் பக்கம்-10



தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் பக்கம்-11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM
.294, கண்டிவீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022



## பாதுகாப்பற்ற, சஞ்சலமான வாழ்க்கைக்கு முடிவு வேண்டும்

இங்கு மக்களின் இருப்பை உறுதி செய்வதற்கான காரியங்கள் எதையும் தமிழ் மக்களின் தெரிவு செய்யப்பட்ட தலைமைகள் முன்னெடுக்காதது கவலையை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

விஸ்வரூபம் எடுத்து வரும் அன்றாட வன்முறையைக் கட்டுப்படுத்துவது, வடக்கு கிழக்கில் தாழந்து போகும் கல்வி மட்டத்தை உயர்த்துவது உயர் பாதுகாப்பு வலயங்களாக கபளீகரம் செய்யப்பட மக்களின் நிலங்களை துரிதமாக மக்களிடம் ஒப்படைத்து 3 தசாப்த அகதிகளான அம்மக்களுக்கு நிலையான பாதுகாப்பான வாழ்வை உறுதி செய்வது

மக்களின் உயிர் உடைமை மற்றும் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வது.

சுயமரியாதை கண்ணியமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பது.

தெரிவு செய்யப்பட்ட தமிழ் தலைவர்களின் கடமையும் இலங்கை அரசின் பொறுப்புமாகும்.

யுத்தம் முடிவடைந்து 7 ஆண்டுகள் கடந்தும் பாதுகாப்பற்ற சஞ்சலமான வாழ்க்கை தொடர்வதாக ஒரு பகுதி மக்கள் உணர்வதான நிலைமை தேசிய அவமானமாகும்.

இயல்பு வாழ்க்கை திரும்புவது மாத்திரமல்ல, தமிழ் - முஸ்லீம்- மலையக மக்களின் பண்பாட்டு, மொழி, மத தனித்துவங்கள் உறுதிப்படுத்தப்படுவதும் இலங்கையின் அனைத்து இனமக்களும் சமத்துவமாக சகோதரத்துவத்துடன் வாழ்வதற்கான நிலைமைகளை உருவாக்குவதும் இலங்கை அரசின் கடமையையாகும்.

இதனை இலங்கையின் சகல இன சமூகங்களின் தலைமைகளுடன் சிவில் சமூகத்துடன் இணைந்து செயற்படுத்த வேண்டும்.

அதி தீவிர நிலைப்பாடுகள் இங்கு ஆக்கபூர்வமாக எதையும் நிகழவிடாது.

“வினாச காலே விபரீத புத்தி” என்பது எமது அனுபவ பாடமாகும்.

தொடர்ச்சியாக அநீதி இழைக்கப்பட்ட சமூகங்களின் அபிலாசைகள் இனியும் அலட்சியம் செய்யப்படுவது சகிக்கப்பட முடியாததாகும்.

அதே போல் சமூக ரீதியான, பால் ரீதியான அநீதிகளை இல்லாதொழிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

சமூகங்களின் -தனிமனிதர்களின் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான அக்கறையீனம் தொடர்ந்து நிலவுகிறது.

சுதந்திர ஆணைக்குழுக்கள், ,அரசியல் யாப்பு சீர் திருத்தம், தகவல் அறியும் உரிமைச் சட்டம், நாட்டைச் செயலிழக்கச் செய்யும் ஊழலை ஒழிப்பதற்கான முனைப்பு என்பன நம்பிக்கை அளிக்கும் செய்திகளாக இருந்தாலும் பாராளுமன்றத்தில் நிகழும் குடுமிபிடிச் சண்டைகள் -அடிதடிகள் அவநம்பிகைகையை வலுப்படுத்துகின்றன.

இலங்கையின் அரசியல் மேலிருந்து கீழ்வரை அடிப்படையான அறங்களை நோக்கி வழிப்படுத்தப்பட வேண்டி இருக்கிறது.

இனவாதம்- கோஸ்டிவாதம் -அடியாள் கலாச்சாரம் என்பன மக்களின் பிரச்சனைகளை திசை திருப்புவதும் கும்பல் மனோபாவத்தை அதிகரிப்பதுமாகவே அமையும்.

நாகரிகமானதும் -கண்ணியமானதும்- முன்னுதாரணமானதும் -இராணுவவாத மனோநிலை அற்ற- பல்லினப்பாங்கானதும் -சாதாரண மக்களின் சுதந்திரத்தை உறுதி செய்வதும் சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதுமான பிரக்ஞையுள்ள ஆட்சி மற்றும் அரசியல் போக்கே அவசியப்படுகிறது.

# பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 2016ம் ஆண்டு ஏப்ரல் 2ந் திகதி நடைபெற்ற கட்சிக் காங்கிரஸினால் தீர்மானிக்கப்பட்ட அரசியற் திட்ட பிரகடனங்களிலிருந்து

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கடந்த காலங்களில் அது கொண்டிருந்த இலட்சியங்கள் குறிக்கோள்களுக்கு ஏற்பவும் எதிர்நோக்கிய வெவ்வேறு சூழ்நிலைகளுக்கேற்பவும் வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு உள்ளடக்கங்களுடன் மாறுபட்ட அரசியல் வழிமுறைகளைக் கையாண்டு செயற்பட்டு வந்திருக்கிறது. 2016ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற கட்சியின் காங்கிரஸானது கட்சியின் கடந்தகால வரலாற்றுப் பாரம்பரியங்களையும் நாட்டின் கடந்தகால வரலாற்று அநுபவங்களையும் அடிப்படையாகக் கொள்வதோடு மக்களின் இன்றைய அபிலாஷைகள் மற்றும் தேவைகளை கவனத்திற் கொண்டும் இன்றைய உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைமைகளை அவதானத்தில் எடுத்தும் கட்சியின் எதிர்காலத்துக்கான அரசியற் திட்டத்தையும், கட்சியின் கட்டமைப்பையும், கட்சியின் வேலைத் திட்டங்களுக்கான மூல அணுகுமுறைகளையும், கட்சியின் நடைமுறைகளுக்கான அரசியற் பாதையையும் தீர்மானித்துள்ளது. அத்துடன் கட்சியின் பெயரிலும் மாற்றங்களைத் தீர்மானித்துள்ளது. மேலும் கட்சியின் காங்கிரஸானது இனிவரும் காலத்துக்கான கட்சியின் தேசிய தலைமையையும் தெரிவு செய்துள்ளது. ஜனநாயக பண்பாட்டின் அடிப்படையில் காங்கிரஸ் மாநாட்டினால் மேற்கொள்ளப்பட்ட கட்சியின் அரசியற் திட்ட தீர்மானங்கள் பகிரங்கமாக இங்கே மக்களுக்கு பிரகடனப்படுத்தப்படுகிறது

1) இலங்கையின் அனைத்து இனமக்களும் உண்மையான சுதந்திரங்களுடனும், சமத்துவமாகவும், பரஸ்பர நம்பிக்கைகள் கொண்ட சகோதரத்துவ உணர்வுகளுடனும், சமாதானமாகவும் செழிப்பான வாழ்க்கையை நோக்கி ஒன்றுபட்டு முன்னேறுவதற்கு உரிய வகையில் இந்த நாட்டில் ஒரு நிரந்தரமான உறுதியான அரசியற் தீர்வு காணப்பட வேண்டும். அதற்கு இலங்கையின் அரசாட்சி அமைப்பு ஒரு கூட்டாட்சிக் குடியரசை நோக்கி பரிணாமமடைய வேண்டும் எனவும், அதை நோக்கிய வகையான இயங்கு சக்தியுடையதோர் அரசியற் கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு இலங்கையின் அனைத்து அரசியல் சமூகத் தலைவர்களும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என இம் மாநாடு கோருகிறது:

2) இலங்கையில் உண்மையான தேசிய நல்லிணக்கம், தேசிய இனங்களுக்கிடையில் சமாதானமான சகவாழ்வு ஏற்பட வேண்டுமாயின் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையான தேசிய இனங்கள் ஒவ்வொன்றும் தனித்துவமான வெவ்வேறு அரசியல் சமூக அடையாளங்களையும், பொருளாதார வாழ்வுத் தளங்களையும் கொண்டுள்ளன என்பது அரசியல் யாப்பு ரீதியாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். அதற்குரிய வகையில் முற்போக்கானதொரு தேசிய அரசியற் பொருளாதாரக் கட்டமைப்பும் இலங்கையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மத்திய ஆட்சியமைப்பிலும், அவரவரது பாரம்பரிய பிரதேசங்களில் உள்ள மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசமைப்புகளிலும் இலங்கையில் வாழும் சிறுபான்மையான தேசிய இன சமூகங்களுக்கு சமநீதியின் அடிப்படையில் நியாயமான அரசியல் மற்றும் நிர்வாக நியமனங்களும், கல்விக்கான வாய்ப்புகளும், பொருளாதார சமூக கட்டமைப்புகளில் உரிய பங்குகளும் வழங்கப்படுதல் வேண்டுமென இம்மாநாடு அறை கூவல் விடுக்கின்றது:

8) இங்கு சாதி அடிப்படையிலான தீண்டாமை, பாரபட்சம், புறக்கணிப்பு என்பன இன்றுவரை தமிழ்ச் சமூகத்தை உள்ளிருந்தே அரித்தழித்து நோய்களாக உள்ளன. இது பல்வேறு வடிவங்களில் பல்வேறு அரங்குகளுக்கு வியாபித்திருக்கிறது, மேலைத் தேய நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்றிருக்கிறது. இங்கு தீண்டாமை மெருகூட்டப்பட்ட வடிவத்தை எடுத்திருக்கிற போதிலும் நிலம், கல்வி, தொழில் போன்ற விடயங்களில் இக்கொடுமைக்கு உள்ளான மக்கள் காலம் காலமாக எதிர்நோக்கிய சவால்களை இன்னமும் வெவ்வேறு தளங்களிலும் வெவ்வேறு அளவுகளிலும் வடிவங்களிலும் சந்தித்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். இங்கு சாதி அடிப்படையிலான வேறுபாடுகளின்றி ஒவ்வொருவரும் கண்ணியமான மனிதர்களாக கௌரவமான முறையில் நடத்தப்பட வேண்டும். சாதி முறை இங்கு சட்டவிரோதமாக்கப்பட வேண்டும். மக்களிடையே உண்மையான சமநீதி கொண்ட சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கு அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளும் ஓரணி திரள வேண்டுமென இம்மாநாடு அழைப்பு விடுக்கின்றது.

11) கடந்த முப்பது ஆண்டுகால உள்நாட்டுப் போரினால் ஏற்பட்ட இழப்புகள், அழிவுகள், இடம் பெயர்வு, அகதி வாழ்வு போன்றவை பெரிதும் தமிழ்ப் பெண்களையே பாதித்துள்ளன. இங்கு பெண்கள் சுய பொருளாதாரரீதியான பாதுகாப்புகளைப் பெறுவதற்கான முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும். சட்ட ரீதியாக பெண்களுக்கான சமூக பாதுகாப்புகள் நடைமுறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் சட்டவாக்க மற்றும் நிர்வாக அமைப்புகளில் பெண்களின் பிரசன்னம் போதிய அளவு இருக்கும் வகையாக அரசியல் யாப்புரீதியான ஏற்பாடுகள் மேறகொள்ளப்பட வேண்டும். இலங்கையின் அனைத்து ஜனநாயக சக்திகளும் அணிதிரண்டு பெண்களுக்கான சமத்துவம், பாதுகாப்பு மற்றும் முன்னேற்றங்களுக்காக குரல் கொடுக்க வேண்டுமென இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

20) யுத்தத்தின் பாதகமான விளைவுகளில் ஒன்று உயர் பாதுகாப்பு வலயங்களின் உருவாக்கம். இவ்வாறாக ஆக்கப்பட்ட வலயங்களுக்காக அரசினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் சில ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மக்கள் மீளக் குடியேறுவதற்கு விடப்பட்டாலும் இன்னமும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கம் உடனடியாக பொதுமக்களின் காணிகளை விடுவித்து அவர்கள் அனைவரும் காலதாமதமின்றி அவரவரது சொந்த இடங்களில் குடியேறி கௌரவமாக வாழ வழிவகுக்க வேண்டுமென இம்மாநாடு கோருகிறது.

### தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும் ,
ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் :-

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

294, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.
021 2222022

E P I C
P.O. Box 431
Sutton SM1 9LE
UK
email: eprlfp@yahoo.co.uk

165, கடல்முக வீதி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1970கள் மற்றும் 80ம்ஆண்டுகளில் நிலவிய இலங்கையின் அரசியல் மற்றும் ஈழ மக்களின் அபிலாஷைகள் மேலும் இலங்கையுடனான இந்திய மற்றும் சர்வதேச உறவுகள் ஆகியவற்றை இன்றைய நிலைமைகளோடு ஒப்பிடுகையில் பெரும் மாற்றங்களுக்கு உள்ளாகியிருப்பதை நாம் தெளிவாக அடையாளம் காண்பது அவசியமாகும். காலச் சூழல்கள் மற்றும் மக்கள் சமூகத்தின் யதார்த்தமான தேவைகளில் புறவயமாக ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப சமூக அரசியலில் அகவயமான மாற்றங்களை ஏற்படுத்தாவிடில் அந்த சமூகம் அழிவுப்பாதையிலேயே வழிநடத்தப்படும். இக்கோட்பாட்டின் அடி ஒற்றியே பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது “தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி” யாக வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் தனக்குத்தானே மாற்றங்களை வரித்துக் கொண்டுள்ளது. சிலரின் சுயதிருப்தியான கனவுகளுக்காக அல்ல மாறாக சுரண்டப்படும், ஒடுக்கப்படும், புறக்கணிக்கப்படும், அடக்குமுறைகளுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாகிக் கிடக்கும் பரந்துபட்ட மக்களின் விடிவுக்காகவும் அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காகவும் செயற்படுவதே மக்கள் கட்சி.**

# தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி

## காலத்தின் கட்டாயமான காரியங்களை முன்னெடுக்கும்

-மாதவன்-

பொதுமக்கள் அவ்வப்போது தமது வாக்குகள் மூலம் ஆளுபவர்களைத் தேர்ந்தெடுக்கவும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆட்சி பீடத்தின் அதிகாரங்களைக் கையிலெடுத்து மக்களை ஆளவுமென ஒரு நாடு இருக்குமானால் அந்த நாடு ஒரு ஜனநாயக நாடு எனவும் அந்த நாட்டில் ஜனநாயகம் நிலவுகிறது எனவும் ஜனநாயகத்தின் பண்புகளை குறுகிய அர்த்தத்தில் புரிந்து கொள்ளும் நிலைமையே இன்று பரவலாகக் காணப்படுகிறது.

ஜனநாயகம் பற்றிய அர்த்தமானது முதலாளித்துவ ஜனநாயகவாத அறிஞர்களின் கருத்துக்களுக்கும், சோசலிசப் புரட்சி மற்றும் சமூக ஜனநாயக அறிஞர்கள் கொண்டிருக்கும் விளக்கங்களுக்கும் இடையே நுட்பமான வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறது.

ஜனநாயகம் என்பதை தமிழில் மக்களாட்சி என்கிறோம். ஆபிரகாம் லிங்கனின் வாக்கியத்தில் "மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களின் ஆட்சியே" ஜனநாயகம். இங்கு மக்கள் என்பது எந்த மக்களைக் குறிக்கின்றது என்பது அடிப்படையான கேள்வியாகும். இங்கு பரந்துபட்ட பொதுமக்கள் தேர்தல்களின் போது வாக்குப் போட்டாலும் பெரும் முதலாளிகளாகவும், வர்த்தகர்களாகவும் வேறுவகைகளில் பெரும் பணக்காரர்களாகவும் ஆகிக் கொண்டவர்களின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஆட்சியாளர்களே இங்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களே இங்கு மக்கள் எனும் அந்தஸ்த்தைப் பெறுகிறார்கள். முதலாளித்துவத்தில் ஜனநாயகம் அவர்களுக்காகவே அவர்களின் விசுவாசிகளால் அல்லது ஏஜன்டுகளால் நடத்தப்படும் அவர்களின் ஆட்சி. இங்கு நடைபெறும் ஆட்சியானது பரந்துபட்ட பொதுமக்களின் நலன்களுக்காக அவர்களின் உண்மையான நேர்மையான பிரதிநிதிகளால் நடத்தப்படும் ஆட்சியல்ல.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பெரும் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களினதும் மற்றும் வகையான பணக்காரர்களினதும் பண ஆதரவுகளைப் பெற்றவர்கள், மேலும் முதலாளித்துவ ஊடகங்களால் நல்லவர்களாக வல்லவர்களாக பிரபல்யப் படுத்தப்படுபவர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்கிறார்கள். பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் அவ்வாறான பணம் படைத்தவர்கள் மட்டுமல்லாது கள்ளக்கடத்தல் தேச விரோதிகளும், கட்டைப்பஞ்சாயத்து மற்றும் ரவுடிக்கும்பல் சமூக விரோதிகளும், லஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகளால் பொதுமக்கள் நிதியையும் இயற்கை வளங்களையும் கொள்ளையடிக்கும் மக்கள் விரோத கும்பல்களுமே இங்கு மக்களுக்கான பிரதிநிதிகள் யார் என்பதைத் தீர்மானிக்கிறார்கள். இங்கு மக்களுக்கான சேவைகள், சமூக பொருளாதார முன்னேற்றங்கள், பரந்துபட்ட மக்களுக்கான அடிப்படை உரிமைகள் என்பவற்றில் எது வித அக்கறையும் இல்லாது குறுக்கு வழிகளில் இன முரண்பாடுகளையும், மத வேறுபாடுகளையும் சாதிப்பிளவுகளையும் பயன்படுத்தி மக்களைப் பிரித்து அவர்களின் வாக்குகளை கவர்ந்து கொள்கிறார்கள்.

தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஓரளவுக்காயினும் பரந்துபட்ட மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுதல் என்பது அந்த நாடுகளிலுள்ள ஆட்சியாளர்கள் பரந்துபட்ட மக்களின் மீது கொண்டுள்ள விருப்பத்தினாலோ அல்லது கருணையினாலோ அல்ல, மாறாக, அந்த நாடுகளில் நிலவும் ஜனநாயகத்தினுடைய வரலாற்று வளர்ச்சியின் கட்டத்தாலும் அந்த நாட்டின் பொருளாதார பலத்தாலுமே நிர்ணயிக்கப்படுகிறது. அதேவேளை, பரந்துபட்ட மக்களின் ஜனநாயக உரிமைகள் குறித்த வளர்ச்சியானது அந்த நாடுகளில் கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த சமூக ஜனநாயகப் போராட்டங்களின் வெற்றிகளாலேயே முன்னேற்றமடைந்தன.

கடந்த காலங்களில் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அடிமை வர்த்தகத்துக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்கள், உலகம் முழுவதுவும் கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேல் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்காக நடைபெற்ற போராட்டங்கள், காலனித்துவத்துக்கெதிராக ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் நடைபெற்ற தேசிய சுதந்திர போராட்டங்கள், லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க நவகாலனித்துவத்துக்கு எதிராக நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்கள், அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்கள், தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களின் நிறவெறிக்கு எதிரான போராட்டம் மேலும் உலகின் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு காலகட்டங்களில் அந்நாடுகளில் நிலவிய இராணுவ ஆட்சிகளுக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்கள் ஆகிய எல்லாமே சமூக ஜனநாயகப் போராட்டங்களே.

சோசலிசத் தத்துவ மாமேதையும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஒப்பற்ற தலைவருமான லெனின், தொழில் வளர்ச்சியடையாத நிலப்பிரபுத்துவ ரஷ்யாவில், ஜார் பேரரசின் ஏகாதிபத்திய சர்வாதிகாரத்துக்கு எதிரான பரந்துபட்ட மக்களின் அதிருப்திகளையும் தொழிலாளர்களின் போராட்டங்களையும் "ரஷ்ய சமூக ஜனநாயக உழைப்பாளர் கட்சி"யைக் கட்டியெழுப்பியதன் மூலமே சோசலிசப் புரட்சியை நோக்கி நகர்த்தினார். [illegible] என்பது அங்கு நடைபெற்ற சமூக ஜனநாயக அரசியற் புரட்சியே.

அனைத்து மக்களுக்கும் வாக்குரிமை கிடைப்பதற்காக நடைபெற்ற போராட்டங்கள், பெண்களின் சம உரிமைகளுக்கான போராட்டங்கள், விவசாயிகளின் நலன்களுக்கான போராட்டங்கள், சாதிவெறி மற்றும் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள், அநீதியான வரிச் சுமைகளுக்கு எதிரான போராட்டங்கள், விலைவாசி ஏற்றங்களுக்கு ஏற்ப தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய கூலி உயர்வுக்கான போராட்டங்கள், ஊழல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு எதிரான போராட்டங்கள் ஆகிய அனைத்தும் சமூக ஜனநாயக போராட்டங்களே.

சமூக ஜனநாயகப் போராட்டங்களே முதலாளித்துவ தேர்தல் ஜனநாயத்திலிருந்து நாட்டில் உண்மையான மக்கள் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதை நோக்கி அரசியல் பொருளாதாரத்தை நெறிப்படுத்தி முன்னோக்கி நகர்த்துகிறது. சிறு சனத்தொகையினரைக் கொண்ட மேல்தட்டு வர்க்கத்தினரின் ஜனநாயகத்தை பரந்துபட்ட மக்களின் ஜனநாயகமாக்குவது சமூக ஜனநாயகப் போராட்டங்களே.

ஈழ மக்களின் விடுதலைப் போராட்டமும் சமூக ஜனநாயகப் புரட்சிக்கான கூறுகளோடுதான் முன்னெடுக்கப்பட்டது. இன முரண்பாடு முன்னணியில் எழுச்சி பெற்றிருந்ததால் இலங்கையில் வாழும் தேசிய இனங்களுக்கான சுய நிர்ணய உரிமைகளுடன் கூடிய, இலங்கை மக்கள் அனைவருக்குமான சோசலிசப் புரட்சியை வெற்றிகரமாக்குவதற்கு முதற் கட்டமாக தோழர் நாபாவின் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஈழ மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தினை சாதிப்பது அவசியம் என்று கருதியே அதனை புரட்சிகரமான சமூக பொருளாதாரக் கண்ணோட்டங்களுடன் முன்னெடுத்தது.

ஆனால், தமிழர் சமூகத்திலே தலையெடுத்து நின்ற குறுகிய தேசியவாதம் உள்ளடக்கத்தில் ஒரு வகையான பாசிச மற்றும் பல்வேறு வகையான பிற்போக்கான குணாம்சங்களின் வல்லமைக்கு ஆட்பட்டது. தொடர்புபட்ட புறக்காரணிகளும் அந்த பிற்போக்குகளையே வலுப்படுத்தின. அதன் விளைவுகள் ஈழமக்களின் விடுதலைப் போராட்டத்தை பெரும் பின்னடைவுகளுக்கு உள்ளாக்கின.

இந்தப் பின்னடைவுகளிலிருந்து ஈழ மக்களின் போராட்டத்தை சரியான மாற்றுப் பாதையில் செலுத்துவதோடு தென்னிலங்கையிலுள்ள முற்போக்கு சக்திகளோடு புதிய வகையான அரசியல் உறவுகளை ஏற்படுத்துவதற்காக இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண சபை ஆகியவற்றை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனக்குரிய வாய்ப்புகளாக ஆக்க முற்பட்டது. புலிகளின் எதேச்சாதிகார அவாவினாலும் ஜே.வி.பியின் சிங்கள பௌத்த மேலாதிக்க கிளர்ச்சியினால் தென்னிலங்கையில் அப்போது ஏற்பட்ட அரசியற் சமநிலை மாற்றங்களாலும் அந்த அடுத்த கட்ட முயற்சிகளும் தடைப்பட்டன. எனினும் 2009ல் புலிகளுக்கு ஏற்பட்ட இராணுவ அழிவும் 2015 ஆண்டு தென்னிலங்கையின் அரசியற் தலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் இலங்கையின் ஒட்டுமொத்தமான அரசியற் சமநிலைமைகளிலும், இலங்கையின் அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுகளிலும் புதியதோர் சூழ் நிலைமைகளை ஏற்படுத்தி உள்ளன.

இங்கு நிலவும் முதலாளித்துவ தேர்தல் முறை பல மாயைகளைக் காட்டி பரந்துபட்ட மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தி வருகிறது. புரந்துபட்ட மக்கள் தமது கற்பனா நம்பிக்கைகளுடன் தமக்கான தலைவர்களை தமது வாக்குகள் மூலம் உருவாக்குவதாக அவ்வப்போது நம்புகிறார்கள். தேர்தல் அரசியல்வாதிகள் தங்கள் வாழ்வில் முன்னேற்றங்களை ஏற்படுத்துவார்கள் - தங்களது அபிலாஷைகளை நிறைவேற்றுவார்கள் - தாங்கள் எதிர்பார்க்கும் இலட்சியங்களை சாதிப்பார்கள் என்று வாக்களிக்கும் போது நம்புகிறார்கள். ஆனால் வாக்களித்து சிறிது காலத்துக்குள்ளேயே தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து விரக்தி கொள்கிறார்கள் - ஆத்திரம் கொள்கிறார்கள். ஆனாலும் மீண்டும் சில ஆண்டுகளுக்குள் அடுத்து வரும் தேர்தலில் அதே ஏமாற்றுக்காரர்களுக்கு வாக்களிக்கிறார்கள். முற்போக்கான சமூக ஜனநாயக சக்திகள் ஓரணி திரண்டு பரந்துபட்ட மக்களை அமைப்புரீதியாகத் திரட்டி அரசியல்மயப் படுத்தாமல் இங்கு மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.

இந்தப் புரிதல்களோடுதான் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி உதயமாகியுள்ளது, அதனது இலட்சிய இலக்குகளை அடையாளம் கண்டுள்ளது - அதனது அரசியல் சமூக பொருளாதார போராட்டக் கோரிக்கைகளை வகுத்துள்ளது - அதனது கோரிக்கைகளை அடைவதற்கான வேலைத் திட்டங்களின் பன்முகங்களையும் தொகுத்துள்ளது. அந்தக் கடமைகளை கண்ணியம் தவறாது கட்டுப்பாட்டோடு காத்திரமாக முன்னெடுப்பதற்கான அரசியற் போராட்டப் பாதையை உறுதியாக வரையறுத்துள்ளது.

காலத்தின் கட்டாயமான காரியங்களை கட்சி உரியபடி முன்னெடுக்கும்

வெற்றிக்கான கட்டத்தையும் கால அளவையும் வரலாறு நிர்ணயிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கயற்கரசி மறைவும் அரசியல் எதிர்பார்ப்புக்களும்

**தமிழ் மக்கள் மத்தியிலே பெண்களைச் சமையல்கட்டு பொம்மைகளாக வளர்த்து வந்த காலத்தில் அக் கொடுமை நிறைந்த கலாசாரத்தை உடைத்து தனது கணவனது அரசியலோடு தன்னையும் இணைத்து நிழலாக பின்தொடர்ந்த ஓர் அற்புத பெண்மணி அவர். அவர் நம்பிய அரசியல். அவர் பேசிய அரசியல் விமர்சனத்திற்கு உரியதாக இருக்கலாம். ஆனால். பெண்களுக்குள்ள ஜனநாயக உரிமையை தனது சமூகத்திற்குள் நிலைக்க வைக்க அவர் ஒரு உதாரணமாக இருந்துள்ளார். அவரது வாழ்வும். செயற்பாடுகளும் அப்போதைய சமூகப் பின்னணியிலிந்தே அவதானிக்கப்பட வேண்டும்.**



# இலங்கை - பிரித்தானியா எதிர்நோக்கும் சவால்கள்




இம்முறை லண்டன் செய்திகளை மிகவும் துன்பம் நிறைந்த செய்தியோடு ஆரம்பிக்கிறேன். நீங்கள் பலரும் அறிந்த திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் மரணச் செய்தி பரவியதும் அவை ஏற்படுத்திய தாக்கங்கள் தமிழ் அரசியலில் காணப்படும் முரண்பட்ட போக்குகள், அதன் கலாசாரத் தன்மைகள் என்பவற்றை வெளிப்படுத்தவனவாக அமைந்தன. தமிழ் மக்கள் மத்தியிலே பெண்களைச் சமையல்கட்டு பொம்மைகளாக வளர்த்து வந்த காலத்தில் அக் கொடுமை நிறைந்த கலாச்சாரத்தை உடைத்து தனது கணவனது அரசியலோடு தன்னையும் இணைத்து நிழலாக பின்தொடர்ந்த ஓர் அற்புத பெண்மணி அவர். அவர் நம்பிய அரசியல், அவர் பேசிய அரசியல் விமர்சனத்திற்கு உரியதாக இருக்கலாம். ஆனால், பெண்களுக்குள்ள ஜனநாயக உரிமையை தனது சமூகத்திற்குள் நிலைக்க வைக்க அவர் ஒரு உதாரணமாக இருந்துள்ளார். அவரது வாழ்வும், செயற்பாடுகளும் அப்போதைய சமூகப் பின்னணி யிலிந்தே அவதானிக்கப்பட வேண்டும். தனது கணவரின் மறைவிற்குப் பின்னர் அரசியலைத் தவிர்த்து வாழ்ந்திருந்தார். இருந்த போதிலும் தனது மக்கள் படும் துயரங்கள் குறித்து முக்கிய தலைவர்களுக்கு தனது கவலையை வெளியிட அவர் தயங்கவில்லை.

தமிழ் அரசியல் வரலாற்றிலே பிரிக்க முடியாத அங்கமாக செயற்பட்ட அவரது மறைவினை பிரித்தானியாவில் செயற்படும் ஊடகங்கள் என தம்மை அழைக்கும் சில நிறுவனங்கள் இருட்டடிப்புச் செய்தன. அம் முக்கியமான செய்தியை தமது தொலைக்காட்சிகளில், வானொலிகளில், இணையத் தளங்களில், இலவச பத்திரிகைகளில் வெளியிட தயங்கின, மறுத்தன. இப் பின்னணியில் அவரது மரணச் சடங்கில் மண்டபம் நிறைந்த மக்கள் தமது இறுதி மரியாதையைச் செலுத்தினார்கள். இதன் மூலம் செய்திகளை இருட்டடிப்புச் செய்தவர்களை இருளுக்குள் தள்ளினார்கள்.

இவரது மரணம் தமிழ் அரசியலில் மேலும் பல திருப்பங்களைத் தரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இறுதிக் கிரியைகளின் போது கலந்துகொண்ட ஒரே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் அவர்கள் கலந்துகொண்டிருந்தார். இவர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவராக இருந்த போதிலும் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களிடையே கணிசமான செல்வாக்கை செலுத்தி வருகிறார். இவரது தற்போதைய வருகை அவரது குடும்பத்தோடு மேலும் நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. அதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் அந்தியஸ்டி கடமைகளின்போது கலந்து கொண்டார். இந் நிகழ்வுகள் அமிர்தலிங்கம் அவர்களின் புதல்வர்களின் மனங்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுகிறது. தமது பெற்றோர் தமிழ் மக்களின் நல்வாழ்விற்காக தம்மை அர்ப்பணித்த பின்னணியில் அம் மக்களுக்கு சரியான அரசியல் அற வழி தேவைப்படும் இத் தருணத்தில் தாம் மௌனமாக இருப்பது பொருத்தமானதா? மக்கள் தொண்டை மேற்கொள்ள சில காலத்தை செலவிட்டால் என்ன? என பலரும் வினவியுள் ளனர். மலையக மக்களின் பிரஜா உரிமைகள் பறிக்கப்பட்ட போது அதற்கு எதிராக தந்தை செல்வா குரல் எழுப்பிய போது இளைஞனாக இருந்த அமிர்தலிங்கம் மிகவும் பக்கபலமாக இருந்தார். அதே போன்று தமிழ் மக்கள் மத்தியிலே செயற்பட்ட அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமை அவசியம் என உணரப்பட்ட போது அதற்கு முழு ஆதரவாக இருந்தார். தமிழரசுக் கட்சியைக் கைவிட்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியே தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் எனக் கூறினார். அதற்காக பல விட்டுக் கொடுப்புகளைச் செய்தார்.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் அதாவது தமிழரசுக் கட்சியைக் கைவிட்டு கூட்டணி அரசியல் நடத்திய நிலமையில் தமிழரசுக் கட்சிக்கு மீண்டும் உயிர் கொடுத்த முயற்சிகள் மக்களுக்குச் சேவை என்ற நோக்கத்தை விட சில அரசியல் வாதிகளின் குறுகிய நோக்கங்களே என்ற கருத்து திருமதி. அமிர்தலிங்கம் அவர்களின் மனதில் ஆழமாகக் காணப்பட்டது. இப் பின்னணியில் தமிழ் மக்களின் ஐக்கியத்தை அதாவது போரினாலும் மற்றும் பல சமூகக் கொடுமைகளாலும் பின்தங்கியுள்ள தமிழ்ச் சமூகத்தை தலைநிமிர்ந்து வாழச் செய்ய புதிய அரசியல் பார்வை அவசியம் என்ற உணர்வு ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இலங்கையின் தேசிய அரசியலில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தேசிய நல்லிணக்கத்தை வற்புறுத்திச் செல்வதால், ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான அரசியல் தீர்வுகளோடு பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்தவல்ல அடிப்படைகளோடு அரசியலில் ஈடுபட திட்டமிடுவதாக தெரிகிறது.

### அரசியல் அமைப்பு மாற்றமும், புலம்பெயர் தமிழர்களும்

தற்போது இலங்கையில் அரசியல் அமைப்பை மாற்றுவதற்கான முயற்சிகள் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் புலம்பெயர் மக்கள் இம் மாற்றங்களில் ஆற்றக்கூடிய பணி குறித்த விவாதங்கள் தற்போது லண்டனில் தொடங்கியுள்ளன. புலம்பெயர் தமிழ் இலங்கையர்களின் ( Non Resident Tamils of SriLanka- NRT-SL) அமைப்பு இதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. சமீபத்தில் அரசியல் ஆர்வலர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், அரசியல் அமைப்பு நிபுணர்கள் என பலதரப்பட்ட பிரிவினர்கள் கலந்து கொண்ட சந்திப்பு இடம்பெற்றது. அரசியல் அமைப்பு இலங்கையில் வாழும் மக்களுக்காக இலங்கையில் புலம்பெயர் என்ற விவாதங்களின் பின்னணியில் இச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 30 வருடகாலப் போரினை உக்கிரமடையச் செய்வதில் புலம்பெயர் தமிழர்கள் கணிசமான செல்வாக்கைச் செலுத்தியுள்ளனர். அதன் விளைவுதான் முள்ளிவாய்க்கால் அவலங்களும், இன்றைய சிக்கல்களுமாகும். இவ்வாறான பரிதாப நிலை மீண்டும் ஏற்படாது தடுக்கப்பட வேண்டுமெனில் அரசியல் அமைப்பு மாற்றங்களுக்கான முனைப்புகளில் காத்திரமான தலையீட்டைச் செய்வதன் மூலம் மீண்டும் தோல்விக்குள் நிலமைகள் விழாமல் தடுக்க முடியும். குறிப்பாக இலங்கை அரசோடு நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் பலமான, சுமுகமான, அமைதியான அரசியல் வாழ்வுக்கான பாதைகளைத் திறக்க முடியும். வெறுமனே அரச எதிர்ப்பு கோஷங்களைக் கைவிட்டு அர்த்தமுள்ள விதத்தில் அரசுடன் இணைந்து குறிப்பாக தற்போது கூட்டமைப்பினர் பின்பற்றும் அணுகுமுறைகளை மேலும் பலப்படுத்திச் செல்லும் நோக்குடன் இவ் அமைப்பினர் கருத்துப் பரிமாறல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர். இதன் இன்னொரு அங்கமாக அரசியல் அமைப்பு நிபுணரும், அரசியல் அமைப்பு சபையின் உறுப்பினருமான ஜெயம்பதி விக்ரமரத்னா அவர்கள் விரைவில் லண்டன் அழைக்கப்படவுள்ளார்.


ஜெயம்பதி விக்ரமரத்னா

### ஐரோப்பிய ஒன்றியம் பிளவுபடும் அபாயம்?

ஐரோப்பிய நாடுகள் பல இணைந்து ஓர் ஒன்றியமாக செயற்படுகின்றன. சுமார் 12 நாடுகள் தத்தமது நாடுகளின் நாணயத்தைக் கைவிட்டு ஈரோ (Euro) என அழைக்கப்படும் பொது நாணயத்தை புழக்கத்திற்கு ஏற்றுள்ளனர். அமெரிக்காவின் மிக நெருக்கமான நாடாகக் கருதப்படும் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பு நாடாக இருந்த போதிலும் ஈரோ நாணயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இருப்பினும் ஒன்றியத்தின் பல சட்டங்களை ஏற்று நடைமுறைப்படுத்தி வருகிறது. இதனால் மிகப் பெருந்தொகையான ஐரோப்பியர்கள் பிரித்தானியாவில் வேலை செய்கின்றனர். இதன் காரணமாக பல பிரித்தானிய தொழிலாளர்கள் வேலைகளை இழந்துள்ளதோடு அவர்களது வருமானத்திலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மலிவான சம்பளத்திற்கு கிழக்கு ஐரோப்பியர்கள் வேலை செய்வதால் சம்பளங்களிலும் வீழ்ச்சி எற்பட்டுள்ளது. அத்துடன் வைத்தியசாலைகளில், பாடசாலைகளில் இட நெருக்கடி, குற்றச் சம்பவங்கள் அதிகரிப்பு என முன்னர் இல்லாத அளவுக்கு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை பலமடைந்து வருகிறது. எதிர் வரும் யூன் மாதம் மக்களிடம் ஒன்றியத்திலிருந்து விலகுவதா? இல்லையா? என வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இவ் விவகாரம் தற்போது மிகவும் தீவிரமடைந்துள்ளதோடு வலதுசாரிகள் ஆட்சியைப் பிடிக்கும் நிலமைகளும் காணப்படுகிறது.

சென்ற வாரம் ஒஸ்ரியா (Austria) நாட்டின் அதிபருக்கான ஆரம்ப தேர்தல் இடம்பெற்றது. இத் தேர்தலில் தீவிர வலதுசாரி கட்சியின் அபேட்சகர் பாரிய வெற்றியைப் பெற்றுள்ளார். இவ் வெற்றி ஐரோப்பா எங்கும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. நோர்பேர்ட் கோவ்வர் (Nobert Hofer) என்பவரின் இவ் வெற்றியைத் தொடர்ந்து அங்கு திடீரென பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்ற செய்திகளும் வெளியாகியுள்ளன. 2018 இல் தேர்தல் நடத்தப்படவேண்டிய நிலையில் இடை நடுவில் அவர் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் என்ற நிலை காணப்படுகிறது. அந் நாட்டின் ஜனாதிபதி பதவி என்பது வெறும் பெயரளவில் உள்ளது என்ற போதிலும் அவர் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.


நோர்பேர்ட் கோவ்வர்

45 வயதானவரும், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவருமான அவர் சமீபகாலமாக கைத் துப்பாக்கியை எடுத்துச் செல்வதாகவும், அதற்கான காரணங்களைக் கேட்ட போது பெருந்தொகையான அகதிகள் நாட்டிற்குள் வந்திருப்பதால் பாதுகாப்பிற்கு அச்சம் கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார். பொதுவாக ஸ்கன்டிநேவிய நாடுகளில் அரசியல் தலைவர்கள் மிகச் சர்வ சாதாரணமாக சைக்கிள்களில் சென்றுவரும் அச்சமற்ற சூழல் அங்கு உண்டு. சிரியா, மற்றும் மத்தியதரைக் கடல் பிராந்தியத்திலிருந்து அகதிகள் வருவதற்கு எதிராக அவர் கருத்துக்களைக் கூறி வருகிறார். ஒஸ்ரிய நாட்டின் எல்லைப் பிரதேசங்கள் அகதிகளின் வருகைக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றன.

இதே போன்ற நிலை தற்பொது போலந்து நாட்டிலும் காணப்படுகிறது. தீவிர வலதுசாரிக் கட்சி பதவிக்கு வரலாம் எனக் கருதப்படுகிறது. முன்னாள் நாட்டின் தலைவரான வலேசா அவர்கள் வலதுசாரி நோக்கங்கள் குறித்து மக்களை எச்சரித்துள்ளார். பிரான்ஸ் நாட்டிலும், ஜேர்மனியிலும் இந் நிலை காணப்படுகிறது.

இப் பின்னணியில் யூன் மாதம் பிரித்தானியாவில் இடம்பெறப்போகும் வாக்கெடுப்பு பிரித்தானியா வெளியேறுவதற்கு ஆதரவாக இருக்கும் என்ற அச்சம் ஏற்பட்டிருந்ததால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அவர்களும் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறினால் பல பொருளாதார இழப்புகளுக்கு முகம் கொடுக்கவேண்டி ஏற்படும் என இதற்கென பிரித்தானியாவில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

ஐரோப்பாவில் தீவிர வலதுசாரி இயக்கங்கள் பலம்பெற்று வருவது அங்கு வாழும் வெளிநாட்டவர்களுக்கு பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத் தேர்தல் குறித்த மேலதிக செய்திகளை நாம் அடுத்த இதழில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கான அரசியற் தீர்வில் சம்பந்தர் பேச்சுத் தடுமாறுவது ஏன்?

- பார்த்திபன் -

கடந்த பாராளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டு 2016ம் ஆண்டுக்குள் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான அரசியற் தீர்வைக் காண்பதற்கு தமக்கு ஆணை தரும்படி கேட்டார் சம்பந்தர். வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களில் 85 சதவீதத்துக்கு மேற்பட்டோர் தமது வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் ஒற்றுமையாக தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்து பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தனர்.

திரு சம்பந்தன் மற்றும் திரு சுமந்திரன் போன்றோருட்பட தமிழரசுக் கட்சியினரே வடக்கு கிழக்கிலிருந்து மிகப் பெரும்பான்மையான வாக்குகளுடன் பாராளுமன்றம் வர வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்களின் தலைமையிலான சிறி லங்கா சுதந்திரக் கட்சியினரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரும் விரும்பினர். அதற்காக தமிழரசுக் கட்சியினரின் தேர்தல் வெற்றிக்கான அனைத்து உதவிகளையும் தாராளமாகவே வழங்கினர். அவர்களது விருப்பப்படியே வடக்கு கிழக்கில் பாராளுமன்ற ஆசனங்களுக்கான தேர்தல் வெற்றிகளும் அமைந்தன.

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறி லங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டரசாங்கத்தை அமைத்தனர். இந்த அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியினரையும் சேர்த்துக் கொள்ள புதிய அரசாங்கத் தரப்பு மிகவும் விருப்பம் கொண்டிருந்தமை அனைவரும் அறிந்ததே. ஆனால் அது தமிழரசுக் கட்சியின் அரசியற் பாரம்பரியத்துக்கு முரணானது என்பதால் தமிழரசுக் கட்சி அமைச்சரவையில் இணையாமல் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டே அரசாங்கத்துக்கு ஆதரவாக இருக்கும் அரசியலை தமிழரசுக் கட்சி கடைப்பிடிக்கத் தொடங்கியது. அந்த நல்லெண்ணத்துக்கு கைமாற்றாக அரசாங்கம் திரு சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கியது. அரசாங்கமே எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கும் புதிய ஜனநாயக கலாச்சாரத்தை இலங்கையே முதன்முதலில் ஆரம்பித்தது என்ற வரலாற்றுப் பெருமையை இலங்கை பெற்றுக் கொண்டது.

எதிர்க்கட்சித் தலைவரான சம்பந்தர் அரசாங்கத்தின் மீது பூரண நம்பிக்கை கொண்டவராக 2016ம் ஆண்டுக்குள் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான அரசியற் தீர்வையும் உள்ளடக்கிய வகையில் புதிய அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்டு விடும் என அடித்துக் கூறினார். அரசாங்கமும் தன்பங்குக்கு அரசியல் யாப்பு தொடர்பான மக்கள் கருத்தறியும் அமைப்பை உருவாக்கி செயற்பட வைத்தது. பாராளுமன்றத்தை அரசியல் யாப்புப் பேரவையாக செயற்படுவதற்கான மசோதாவை பாராளுமன்றத்தில் முன்வைத்தது.

தான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற காலத்துக்குள்ளேயே அரசாங்கம் தமிழர்களுக்கான அரசியற் தீர்வைத் தரப்போகிறது என்ற நம்பிக்கையில் சம்பந்தர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக இருந்தும் சம்பந்தரின் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை எந்தவித விமர்சனமுமின்றி ஆதரித்து வாக்களித்தமை குறிப்பிடத் தக்கது. ஜனநாயக உலக வரலாற்றிலேயே ஓர் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை எந்தவித விமர்சனமுமின்றி ஆதரித்து வாக்களித்த பெருமை தமிழரசுக் கட்சியையே சாரும். அந்த வகையிலும் இலங்கை ஒரு வரலாற்றுச் சாதனையை ஆற்றி உள்ளது.

> இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி களும் இங்கிலாந்து புலிப்பிரமுகர்களும் உள்ளடங்கிய சிங்கப்பூர் மாநாட்டில் -ஒற்றையாட்சியை நீக்காமல், வடக்கு கிழக்கை இணைக்காமல் ஆனால் கணிசமான அதிகாரங்கள் கொண்ட காத்திரமான மாகாண சபைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்- என ஒரு ரகசிய உடன்பாடு காணப்பட்டமை பரகசியமான ஒன்றே.



தேர்தலின் போது 2016 க்குள் அரசியற் தீர்வு வரும் என அறைகூவல் விட்டு மக்கள் ஆணை கேட்ட சம்பந்தர் தேர்தல் முடிந்த பின்னும் அதனை உறுதியாக அடித்துக் கூறினார். ஆனால், அவர் அண்மையில் 2016 க்குள் அரசியற் தீர்வு 'வரூஉம் ஆனா வராது' எனும் வகையாக யாழ்ப்பாணத்தில் பேட்டி அளித்திருப்பது புதிய அரசியல் யாப்பில் அரசியற் தீர்வுக்கான ஏற்பாடுகள் பற்றிய பல சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது.

சந்தேகங்களைக் கிளரும் அகப்புற அரசியற் போக்குகளில் பிரதானமான சில:-

ஐக்கிய தேசியக் கட்சியும் சரி! சிறி லங்கா சுதந்திரக் கட்சியும் சரி! சமஷ்டி முறையிலான அரசியற் தீர்வுக்கோ, வடக்கு- கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கோ தயாராக இல்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகளும் இங்கிலாந்து புலிப்பிரமுகர்களும் உள்ளடங்கிய சிங்கப்பூர் மாநாட்டில் - ஒற்றையாட்சியை நீக்காமல், வடக்கு கிழக்கை இணைக்காமல் ஆனால் கணிசமான அதிகாரங்கள் கொண்ட காத்திரமான மாகாண சபைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்- என ஒரு ரகசிய உடன்பாடு காணப்பட்டமை பரகசியமான ஒன்றே.

அதை வைத்துத்தான் சம்பந்தர் 2016க்குள் அரசியற் தீர்வு என அடித்துக் கூறினார் என்பதும் தெளிவு.

இந்த ரகசிய பேரங்களில் இருந்து வடக்கு முதல்வர் விக்கியர் விலக்கியே வைக்கப்பட்டிருந்தார் என்பதும் பொது அறிவு.

இந்தக் குட்டையைக் கலக்கி அரசியல் மீன் பிடிப்பதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விக்கியரை முன்னால் விட்டு உருவாக்கிய வலையே தமிழ் மக்கள் பேரவை.

விக்கியர் அவர்கள் தமிழ் மக்கள் பேரவை ஊடாக கொடுத்த அழுத்தத்தைச் சமாளிக்கவென படியிறங்கிய சம்பந்தர் பல்வேறு கூட்டங்களில் "வடக்கு கிழக்கு இணைய வேண்டும்", "சமஷ்டி தான் தீர்வு" என அடித்துக் கூறி விட்டார்.

தமிழரசுக்காரர்களும் தமிழ்ப் பேரவைக் காரர்களும் போட்டி போட்டுக் கொண்டு தமிழர்களின் அபிலாஷை வடக்கு - கிழக்கு இணைப்பே, சமஷ்டித் தீர்வே, அப்படியல்லாத தீர்வு எதற்கு - யாருக்கு, அப்படியல்லாத தீர்வு ஏற்கப்பட மாட்டாது என தமிழ் மக்கள் மத்தியில் கடந்த சில மாதங்களாக மூளைச் சலவை செய்து விட்ள்ளனர்.

இப்படியெல்லாம் இருக்க அண்மைக் கால நிலைமைகளில் பல சந்தேகங்கள் எழுகின்றன.

சந்தேகம் ஒன்று: வடக்கு - கிழக்கு இணைப்பும் இல்லாமல், ஒற்றையாட்சியும் நீக்கப்படாமல், வரையறுக்கப்பட்ட பொலிஸ் அதிகாரம் மற்றும் நில அதிகாரம் கொண்ட ஒரு தீர்வையே அரசாங்கம் முன்வைக்கும் அதனை சம்பந்தர் ரகசியமாக ஆட்சியாளர்களிடம் கடைசி நிமிடத்தில் ஏற்றுக் கொண்டாலும், தமிழ் மக்கள் மத்தியில் அப்படிப்பட்ட ஒரு தீர்வை தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், அரசாங்கமே தன்னிச்சையாக அரசியற் தீர்வை நிறைவேற்றியுள்ளது எனவும் நாடகம் போடுவதற்கான முன்காட்சியாகவே இப்போது அரசியற் திர்வு பற்றிய சந்தேகத்தைக் கிளப்புகிறாரா?

சந்தேகம் இரண்டு:- ஒற்றையாட்சியையும் நீக்காமல் வடக்கு கிழக்கையும் இணைக்காமல் பொலிஸ் மற்றும் நில அதிகாரங்களும் இல்லாமல் உள்ள ஓர் அதிகாரப் பகிர்வு அரசியற் தீர்வை தமிழர்கள் மத்தியில் தாங்கள்தான் சாதித்ததாக ஏற்றுக் கொள்ள வைப்பது சிரமமென்பதால், புதிய அரசியல் யாப்பில் அரசியற் தீர்வு தொடர்பான எதனையும் உள்ளடக்காமல் அவ்விடயம் பற்றி தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்துவது என தொடர் நாடகமான ஒரு அரசியலுக்கு சம்பந்தர் முயற்சிக்கிறாரா? ஏனெனில் அதனை அரசும் விரும்பும், அத்துடன் சம்பந்தருக்கும் தமது தமிழ்த் தேசிய வீறாப்பு அரசியலை தமிழர்கள் மத்தியில் தொடர்ந்தும் கொண்டு செல்வதற்கு வசதியாக இருக்கும். இதனாலா இப்போது 2016 க்குள் அரசியற் தீர்வு என்பதைப் பற்றித் தடுமாறிப் பேசுகிறார்.

சந்தேகம் மூன்று:- இன்று இலங்கையில் நிலவும் அரசியற் சூழ்நிலையில் இந்தியா மற்றும் மேலைத் தேச நாடுகள் இலங்கை அரசுடன் இப்போது கொண்டிருக்கும் நல்லுறவுகளின் நிலைமையில் வடக்கு கிழக்கு இணைப்பில் பிடிவாதமாக இருப்பதனாலோ! ஒற்றையாட்சியை நீக்க வேண்டுமென ஒற்றைக் காலில் நிற்பதனாலோ தமிழர்களுக்கு நிரந்தரமாக எந்தவொரு அரசியற் தீர்வையும் பெற முடியாத நிலைமை இன்னுமொரு இரண்டு மூன்று தசாப்பதங்களுக்குத் தள்ளிப் போகலாம் என்பதால் ஒற்றையாட்சிக்கு உள்ளேயே, அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக இருக்கும் வகையாகவே, ஆயினும், தமிழ் மக்களுக்கு பெருமளவு பயனளிக்கக் கூடிய காத்திரமான அதிகாரங்கள் கொண்டதாக மாகாண சபை அமைகின்ற ஓர் அரசியற் தீர்வு கிடைக்கின்ற பட்சத்தில் அதனை ஏற்பதே யதார்த்தமாகும் என்பது சம்பந்தருக்கு நன்றாகவே தெரியும்.

எனினும், சமஷ்டி, சுயநிர்ணய உரிமை, வடக்கு கிழக்கு இணைப்பு என்பன இல்லாத ஒன்று தமிழருக்கான அரசியற் தீர்வாக அமையமாட்டாது என தாங்கள் போட்டி போட்டு வளர்த்து விட்டுள்ள குருட்டுத் தனமான தேர்தற் தமிழ்த் தேசியம் ஒரு பூதமாக இப்போது வளர்ந்திருக்கிறது. கரணம் தப்பினால் மரணம் என்பது போல அந்தப் பூதம் தமக்கெதிராக எவ்வேளையிலும் செயற்படும் என்பதை சம்பந்தர் நன்கு புரிந்தவரே!. எனினும், வடக்கு கிழக்கு இணையாவிடினும் ஒற்றையாட்சி நீக்கப்படாவிடினும் காத்திரமான அதிகாரங்கள் கொண்ட ஒரு தீர்வு கிடைக்குமாயின் அதனை ஏற்றுக் கொள்வது காலத்தின் கட்டாயம் என சம்பந்தர் நேர்மையாக, வெளிப்படையாக ஒப்புக் கொண்டு செயற்படும் துணிச்சல் கொண்டவரா? மக்களுக்காக பதவிகளை இழப்பதற்கு சம்பந்தர் தயாரானவரா? இந்த நிலையில் எப்படி தமது அரசியலை முன்னெடுப்பது என்பதில் சம்பந்தர் கொண்டுள்ள குழப்பமே அவரது தற்போதைய அரசியற் தடுமாற்றத்திற்கு காரணமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவ தாராளவாத உலகம், உலகின் கோடானு கோடி சாதாரண மக்களின் பாதுகாப்பான வாழ்வை கேள்விக்குறியாக்கியுள்ளது. இன்று உலக சூழல், உலக சுற்றாடல் மோசமாக மாசடைந்து வருவதும் புவி வெப்பம் அதிகமாகி வருவதற்கும் பிரதான காரணம் நவ தாராளவாத உலக சுரண்டல்காரர்களே உலகின் நாலிலொரு பங்கினருக்கான வளங்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களின் கைகளில் இருப்பதற்குக் காரணமும் நவ தாராளவாத உலகமே!

இரண்டாம் உலகப்போருக்குப் பிந்திய மத்திய கிழக்கு மற்றும் வேறு பல நாடுகளில் போர்களுக்கும் பெருவாரி யான மரணங்களுக்கும் காரணமும் இதுவே

ஆட்சிக் கவிழ்ப்பு மற்றும் சதிகளுக்காக உருவாக்கப்பட்ட குழுக்களின் தொடர்ச்சியே இன்று குரூரமான மத அடிப்படைவாத குழுக்களாக உருவெடுத்துள்ளன.

1980 களின் பிற்பகுதியில் ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகளுக்கு எதிராகப் போராடுவதற்கு ஏகாதிபத்திய சக்திகளால் உருவாக்கப்பட்ட முஜாகிதீன்களின் தொடர்ச்சியே இன்று ஐஎஸ் ஐஎஸ் மற்றும் போடோஹறம் ஆக உருவெடுத்துள்ளது. எல்லையற்ற சுரண்டலுக்காக மனித வாழ்க்கை காட்டுமிராண்டித்தனத்திடம் அகப்படுத்தப்பட்டிருக்கிறது. பல நாடுகள் வாழமுடியாத நரகங்களாக மாற்றப்பட்டுள்ளன.

எதியோப்பிய, சோமாலிய பட்டினியும் மத்திய கிழக்கின் பேரழிவும் ஆபிரிக்காவின் பின்தங்கலும் தெற்கு ஆசியாவிலும் மற்றும் ஐரோப்பிய வட அமெ ரிக்க தெருக்களிலும் உலவும் பயங்கர வாதமும் இந்த நவ தாராளவாதம் தந்த பரிசுகளே

யுத்தங்களில் அறம் இருப்பதாகச் சொல்கிறார்கள்

இங்கு கார்ல்மார்க்ஸ், ரோசா லக்ஸம்பெர்க், காந்தியடிகள், நெல்சன் மண்டேலா, சேகுவேரா, பிடல், ஆங் சாங் சூகி போன்ற தலைவர்களை நாம் யுத்தமற்ற சமாதானத்திற்கான தலை வர்களாக கருத முடியும்.

# உலகம் போற போக்கைப்பாரு



இவர்கள் மானிடத்தின் மகத்தான கனவுகளின் தலைவர்கள்.

ஆனால், உலகத்தை மானிட வெறுப் பின் களமாக மாற்ற முற்பட்ட ஹிட்லர் போன்றவர்கள் வரலாற்றில் தோற்றுப் போனார்கள்.

ஆனால், அதே சாயலுடன் புது மெருகுடன் நவ பாசிசத்தை புத்துயிராக்கம் செய்யும் முயற்சிகள் நிகழ்கின்றன.

இன்று அமெரிக்க குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ரொனால்ட் ரம்ஸ் முஸ்லிம்கள் மீதான வெறுப்பை இந்தியத் தொழிலாளர்கள் மீதான வெறுப்பை உமிழ்கிறார். முஸ்லிம்கள் அமெரிக்காவுக்குள் வருவதை தடை செய்ய வேண்டும். இந்தியார்கள் அமெரிக்காவில் அமெரிக்கர்களின் தொழில்களை ஆக்கிரமித்திருக்கிறார்கள் மெக்ஸிக்கோ எல்லையில் உயர்ந்த மதில் சுவர் எழுப்பப்பட வேண்டும் என்றெல்லாம் இவர் அமெரிக்க சமுதாயத்தில் சர்வசாதாரணமாக பிரசாரம் செய்கிறார்.

பிரித்தானிய சாம்ராச்சியத்தில் சூரியன் மறைவதில்லை என்றிருந்த பிரிட்டனும் இன்று கீழைத்தேச மற்றும் கிழக்கு ஐரேப்பிய மக்களின் படையெடுப்பால் விசனமடைந்திருக்கிறது.

தற்போது மத்திய கிழக்கு யுத்த அழிவுகளால் கிரேக்க துருக்கி கடற்கரைகளில் ஐரோப்பாவை அடைவதற்கு இலட்சக்கணக்கான மக்கள் காத்திருக்கிறார்கள்.

இவை ஒன்றும் தற்செயலாக நடக்கவில்லை. இவர்களின் நவ காலனி மற்றும் யுத்தப் பேரழிவுகள் மக்களை ஐரோப்பாவை நோக்கி நகர நிர்ப்பந்தித்திருக்கிறது.

தங்கள் நாடுகள் அழிவுற்ற போது பாழ்பட்டு வறுமை மிஞ்சிய போது தமது நாடுகள் பாதுகாப்பில்லாதவையாக மாறியபோது மக்கள் இவர்களது வேலிகளை பிடுங்கி எறிய முனைகிறார்கள்.

தற்போது பிரிட்டன், ஐரோப்பிய யூனியனிலிருந்து தனித்துப் போகத் தவியாய்த் தவிக்கிறது.

முதலாளித்துவம் தனக்குரிய சவக் குழியை தானே வெட்டும் என்றார் மார்க்ஸ்

இலத்தீன் அமெரிக்கர்கள், மத்திய கிழக்கினர். ஆபிரிக்கர்கள் தென்னாசியர்கள் சுயாதீனமாகத் தமது சமூக பொருளாதார அபிலாசைகளை எய்துவதற்கு இடமிருந்திருக்குமானால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.

எனவே நீதி நியாயமான புதியதொரு உலகம் ஒன்று படைக்கப்படுவதில் தான் இத்தகைய நெருக்கடிகள் தவிர்க்கப்படலாம். இது உலகத்திற்கும் எமது நாட்டிற்கும் பொருந்தும்.

உலக நாடுகளின் எல்லைகளை மூடி வைப்பது காலாவதியான செயற்பாடு மனிதர்கள் உலகின் எந்த மூலையிலும் வாழலாம் என்ற நிலை ஏற்பட்டாக வேண்டும்.

---

# சமூகத்தை அரித்தழிக்கும் வன்முறை

எமது சமுதாயத்தில் வன்முறை சம்பவங்கள் இன்று அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான செய்திகள் ஊடகங்களில் இடம் பெறாத நாட்களே இல்லை என்றாகிவிட்டது. அவை குரூரமானவையாகவும் சமூகத்தின் பொதுவான அறங்களை மீறுவனவாகவும் காணப்படுகிறது.

முயன்றால் முடியாதென்றில்லை இந்த வன்முறைகள் பெருகுவதற்கான சமூக பொருளாதாரக் காரணிகள், உள ரீதியான காரணிகள் ஆராயப்பட்டு துரிதமாகத் தீர்வு காணப்பட வேண்டும். அதற்கான நிபுணத்துவம் ஆற்றல் எமது சமூகத்தில் இல்லை என்றில்லை. இவை ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அரசியல் சமூக தலைமைத்துவங்கள் இதனை முன்னெடுக்க வேண்டும். வழிகாட்ட வேண்டும்.

குறிப்பாக சட்டம் ஒழுங்கு துறையில் ஸ்தம்பித நிலை, செயற்பாடின்மை, அதன் அதிகார மனோ நிலை, ஊழல் என்பன தொடர்பான கரிசனை அவசியப்படுகிறது. இது மக்களுக்கு நட்புடையதாக சீரமைக்கப்பட வேண்டும். இந்த வன்முறைகள் தொடர்பாக பொலிஸில் விசேட பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு 24 மணி நேரமும் மக்கள் தொடர்பு கொள்வதற்கான ஏற்பாடுகள் வேண்டும்.

குறிப்பாக மொழி தெரிந்தவர்கள் மக்களுடைய முறைப்பாடுகளை கனிவான முறையில் பெற்றுக்கொள்பவர்களாகவும் இருக்க வேண்டும். மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உள்ளூர் மட்டங்களில் விழிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும். கிராம அலுவலர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் இணைந்து செயற்படுவதாக இந்த அமைப்பு இருக்க வேண்டும். சமூக காவற்துறையும் இந்த மக்கள் குழுக்களும் இணைந்து செயற்பட வேண்டும். பாடசாலை மட்டத்தில் பொது அறஞ்சார் கல்வி போதிக்கப்பட வேண்டும்.

பெண்கள் தொடர்பாக சமூகம் தொடர்பாக ஆழமான பிரக்ஞையை உருவாக்கும் விதமாக இது மேற்கொள்ளப்பட வேண்டும். எமது கல்வி முறையில் தீவிர சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. ஜனநாயகம் மனித உரிமை சுதந்திரம் பற்றிய போதனைகள் வேண்டும்.

போதைவஸ்து அதன் அபாயகரமான தன்மை பற்றிய விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

சமூக மட்டத்தில் வாசிகசாலைகள், நூல்நிலையங்கள் மற்றும் அச்சு இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக வன்முறைக்கெதிரான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பால்சமத்துவம் பொது வெளியில் மனிதர்கள் பரஸ்பரம் கண்ணியமாக நடந்துகொள்வது என்பன முக்கியமாகும்.

பொது நிர்வாக இயந்திரமும், சேவைத்துறைகளும் மனித முகம் கொண்டவை என்பதைவிட பல சந்தர்ப்பங்களில் வன்முறை முகங் கொண்டதாகவே அமைகின்றன. மக்கள் தமது சேவைகளைப் பெறுவதற்கு பாடசாலைகள், வைத்தியசாலை, பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகளுக்கு செல்லும்போது உரிய சேவை கிடைக்காது என்ற அச்சத்துடன், தயக்கத்துடன் செல்கிறார்கள். பொதுப் போக்குவரத்தும் அவ்வாறுதான் மக்கள் தாம் நிந்தனை செய்யப்படுவோமோ, சுடு சொல் வருமோ என அஞ்சுகிறார்கள்.

இதன் சாயல் சமூகத்தின் சகல மட்டங்களிலும் பரவியிருக்கிறது. சினிமாக்களும் பல சந்தர்ப்பங்களில் வன்முறையை உலாவ விடுகின்றன. நிஜ வாழ்க்கைக்கும் இந்த சினிமா தொடர்களின் கற்பிதங்களுக்குமான இடைவெளியை இளைய தலைமுறையினர் மத்தியில் உணரவைக்கப்பட வேண்டும்.

காந்தீய அறச்சிந்தனைகள், சகிப்புத் தன்மை, மற்றும் தட்டிக்கேட்டல் உரிமைகள் பற்றிய போதனைகள் சமூக, பாடசாலை மட்டத்தில் தேவைப்படுகின்றன.

பாலியல் வன்கொடுமையில் ஈடுபடுவோர் மற்றும் வாள் வீச்சு சாகசக்காரர்கள் சமூகத்தில் சுதந்திரமாக உலவும் நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

ஊதாரித்தனம் கண்ணுக்கு தெரியாத இடத்திலிருந்து வரும் உழைப்பு இதனால் துஸ்பிரயோகங்கள் அதிகமாக நிகழ்கின்றன.

நுகர்வுக் கலாசாரம் தேவைக்கதிகமானவற்றை அனாவசியமாகப் பெறுவதற்கான வேட்கையை உருவாக்குகின்றது. மோட்டார் சைக்கிள்கள், செல் போன்கள் என்பன மித மிஞ்சிய புழக்கத்தில் உள்ளன. இவற்றை உபயோகிப்பதற்கான உழைப்பு வருமானம் இல்லாத நிலையில் வன்முறைக்கு இந்தப் பொருட்களே வழி ஏற்படுத்துகின்றன.

போதைவஸ்துப் புழக்கம் மிதமிஞ்சிய மதுப் பாவனை என்பன சமூகத்தில் தீய நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கின்றன.

- □ பாடசாலை மாணவர்கள் மத்தியில் நிகழும் வன்முறை,
- □ சமூகத்தில் பெண்கள், சிறுவர்களுக்கெதிராக நிகழும் வன்முறை,
- □ கொள்ளையில் ஈடுபடுவதற்கான வன்முறை
- □ சமூகத்தை பீதி கொள்ள வைத்து தமது முகத்தை முன்நிறுத்தும் வன்முறைகள்,

இந்த வன்முறைகள் சமூகத்தில் சகித்துக் கொள்ளப்பட முடியாதவை.

நுகர்வுக் கலாசாரத்திற்கும் இவ் வன்முறைக்கும் உள்ள தொடர்பு புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

எளிமையான வாழ்வு பற்றிய போதனைகள் அவசியப்படுகின்றன. வேறு சமூகங்களில் இல்லாத அளவிற்கு ஆடம்பரங்கள் அதிகரித்துள்ளன. எளிமையாக தேவைக்கேற்ப பொருட்கள் தமது உழைப்பின் ஊடாக அதனைப் பெறுதல் என்பன அவசியப்படுகின்றன.

பாடசாலை கிராம வாசிகசாலை மட்டத்தில் இந்த வன்முறைக்கெதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்

பெண்கள் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் தயவு தாட்சண்யம் இருக்கக் கூடாது. நள்ளிரவில் பெண்கள் சுதந்திரமாக பயணம் செய்வதற்கான நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

இந்த வன்முறைகள் கட்டுப்படுத்தப்படாவிட்டால் சமூகப் பாதுகாப்பு என்ற விடயத்தில் நாம் தோல்வி அடைந்துவிட்டோம் என்றே அர்த்தமாகும். எமது பிரதேசங்களை அமைதிப் பூங்காக்களாக்க முயல்வோம்.

விளையாட்டுக் கழகங்கள், உடற்பயிற்சி மையங்கள், உடல் உள ஆரோக்கியத்திற்கான மையங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

நீண்டகால அடிப்படையில் இளைய சமுதாயத்தின் மன ஓட்டங்களை அபிலாஷைகளை அறிந்து ஆற்றுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இளைய சமுதாயத்தின் ஆக்க சக்தி முழுமையாக வெளிப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுவதோடு அதற்கான வளங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் வேலு
கல்லாறு



தோழர் சின்னவன்
கந்தளாய்

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

## தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து மார்ச் மாதத்தில் உயிர்நீத்த தோழர்கள் சிலரது விபரங்களே இவை போராட்டத்தில் உயிர்நீத்த அனைவரது உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்



திரு. சாம் தம்பிமுத்து
மட்டக்களப்பு

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| பா.சன்னதிராஜா | சந்திரன் | 04.05.1988 | ஊர்காவற்துறை |
| | ஸ்ரீபன் | 19.05.1986 | பலாலி |
| | கங்கா | 19.05.1986 | மயிலிட்டி |
| | பிரகாஷ் | 23.05.1986 | பருத்தித்துறை |
| மதிவதனி | ஷோபா | 04.05.1985 | யாழ்ப்பாணம் |
| | ரஞ்சன் | 04.05.1985 | யாழ்ப்பாணம் |
| தவராசா | அரவிந்தன் | 04.05.1985 | காரைநகர் |
| கந்தசாமி ஜெயந்தன் | ஜெயந்தன் | 15.05.1989 | நெல்லியடி |
| சாம் தம்பிமுத்து | சாம் | 07.05.1990 | காரைதீவு |
| ரி. விஜயகுமார் | கணேஸ் | 04.05.1985 | காரைதீவு |
| கே. சுந்தரலிங்கம் | வேலு | 04.05.1985 | கல்லாறு |
| கே. சங்கரபிள்ளை | பாலா | 31.05.1985 | வந்தாறுமுலை |
| ஏ. தேவநாதன் | நிர்மல் | 10.05.1985 | மண்டூர் |
| எஸ். கோபாலநிதி | நிதி | 15.05.1987 | பேத்தாளை |
| ரி. யோகராஜா | சின்ன சூரி | 28.05.1989 | வந்தாறுமுலை |
| ஜே. தேவராஜன் | சுரேஸ் | 28.5.1989 | கண்ணிங்கேணி |
| செல்வராசா | சின்னவன் | 04.05.1986 | கந்தளாய் |
| உதயகுமார் | நாதன் | 16.05.1986 | கந்தளாய் |
| பிறேமன் | சின்னவன் | 16.05.1986 | நிலாவெளி |
| நித்தியாநந்தம் | கண்ணன் | 19.05.1989 | கட்டைப்பறிச்சான் |
| சிவலிங்கம் | மனோ | 19.05.1989 | மூதூர் |
| வெங்கடசாமி நாயுடு | மதன்லால் | 19.05.1989 | திருகோணமலை |
| அர்ஜுனா | அர்ஜுனா | 19.05.1989 | திருகோணமலை |
| தவராசா | நகுலன் | 08.05.1989 | தண்ணீரூற்று |
| சி.குமாரவேல் (சிவகுமார்) | பாசன் | 08.05.1989 | சுதந்திரபுரம் |
| அமலதாஸ் | அன்பு | 08.05.1989 | புதுக்குடியிருப்பு |



தோழர் ஷோபா
யாழ்ப்பாணம்



தோழர் பாலா
வந்தாறுமூலை



தோழர் பாசன்
சுதந்திரபுரம்



தோழர் மதன்லால்
திருகோணமலை



தோழர் கணேஷ்
காரைதீவு




## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மேதின அறைகூவல் ...

(1ம் பக்க தொடர்ச்சி)

வறுமையுடன் அல்லாடுகிறார்கள். மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க் வாழ்வை இலகுவாக்க இவர்கள் என்ன செய்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் தலைமைத்துவத்தின் கடமை மக்களுக்கு சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதே! தெரிவு செய்யப்பட்ட பின் இவர்கள் மேட்டுக்குடி கனவான்கள் போல் நடந்து கொள்கிறார்கள்.

இடைக்கிடை தமிழர் உரிமைக்காகவும் உயிர் நீத்தவர்களை பற்றியும் உணர்ச்சி பொங்கப் பேசுகிறார்கள்.

யுத்தத்தில் அழிவடைந்த சமூகம் தனது சொந்த நிலத்தில் நம்பிக்கையுடன் எழுந்து நிற்பதற்கு வழிசெய்ய வேண்டியவர்கள் அலட்சிய மனோபாவத்துடன் இருக்கிறார்கள் என்பது வேதனையான உண்மை.

பல்லாயிரக்காணக்கான பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள், சிறைகளில் வாடுபவர்கள், காணாமல்போனவர்கள் தொடர்பாக வேதனையுடன் வாழும் மக்களுக்கு நல்லசெய்தி ஏதும் இவர்களிடமிருந்து கிட்டவில்லை.

பிரத்தியேகமான சௌகரியமான வாழ்க்கை ஒன்றை தனிப்பட்ட முறையில் அமைத்திருக்கிற இவர்களுக்கு மக்களின் துன்பங்கள் புரிவதில்லை.

இந்தநாட்டில் பொருளாதார ஏற்றத் தாழ்வு, இனங்களின் சமத்துவம் தொடர்பில் கிளர்ச்சிகளும் யுத்தமும் கடந்த 40 ஆண்டுகளாக நடந்துள்ளன. பல்லாயிரம் இளைஞர் யுவதிகளின் குருதி சிந்தப்பட்டிருக்கிறது.

இந்தப் பேரழிவுகளுக்குப் பின்னும் சமூக சமத்துவம் பற்றிய சமூக ஜனநாயகம் பற்றிய எண்ணக் கருத்துக்கள் வளர்ச்சி அடையாதது துரதிஸ்டமானதே

எந்த இன சமூகமானாலும் இன்னொரு சமூகத்தின் மேல் மேலாண்மை செலுத்துவதால் அது சுதந்திரமாக வாழ முடியாது. “வாழு வாழ விடு” என்பதே இங்கு உயர் விழுமியமாக இருக்க முடியும்.

திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலமோ இதர வன்முறைகள் மூலமோ இராணுவ மயமாக்கல் மூலமோ இலங்கையில் சமூகங்களை ஒரு தேசமாக ஒன்றிணைக்க முடியாது. மாற்றம் மனங்களில் நிகழவேண்டும். மனங்களில் அது நிகழ வேண்டுமானால் வெவ்வேறு சமூகங்களின் சமூக பொருளாதார கலாசார வளர்ச்சி தங்கு தடையின்றி நிகழ்வதற்கான இடைவெளி வேண்டும்.

ஆளும் வர்க்கத்திற்கு சாதாரண பெருவாரியான மனிதர்களின் வாழ்வியல் கோலங்கள் பற்றிய அலட்சியம் காணப்படுகிறது. அது எப்போதும் அதிகார மமதையுடன் தான் பிரச்சினைகளை அணுகும். இலங்கையின் அரச மற்றும் அதிகாரக் கட்டமைப்பு இன்றுவரை இறுகிப் போயிருக்கிறது.

எனவே, ஜனநாயக மறுசீரமைப்பு என்பது இடையறாத போராட்டமாக நிகழ வேண்டும். அதற்கு மக்களின் வெகுஜனங்களின் இடையறாத நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

சாதாரண மனிதர்களை கண்ணியப்படுத்துவதாக அவர்களது முக அடையாளத்தை ஏற்றுக்கொள்வதாக அரச முறை மாறும் வரை இந்த இயக்கம் ஓயாது நிகழ வேண்டும்.

அரசும் மக்களின் பிரதிநிதிகள் என்போரும் இதைவிட வேறு விடயங்களுக்கு முன்னுரிமையளிக்க முடியாது.

தேர்தல் காலங்களில் பொதுவாக மக்கள் எனப் பேசுவது மற்றப்படி அந்த மக்களுக்கு, இவர்களிடம் எந்த முக்கியத்துவமும் இல்லை.

தனி மனிதர்களாக எந்த முக்கியத்துவமும் சாதாரண மக்களுக்குக் கிடையாது. ஒரு கெடுபிடியான சூழலில் மக்கள் வாழ்கிறார்கள்.

சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டவர்கள் பெண்கள், வறியவர்கள் நாளாந்தம் அவலங்களை சுமக்கிறார்கள். ஆனால், ஊடகங்களும் அதிகாரவர்க்கமும் எது [illegible]துபோல் எல்லாம் சரியாக இருப்பதுபோல் பாசாங்கு செய்கிறார்கள். அல்லது இங்கிதமாகப் பேச முனைகிறார்கள் மக்களின் சகிப்புத தன்மையையிட்டு இவர்கள் அலட்சியமாக இருக்கிறார்கள். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பது உலகப் பொதுவிதி

மக்கள் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தாம் மேலெழுவதற்குத் தடைகள் எழுவதை ஒரு கட்டத்திற்கு மேல் சகித்துக் கொள்ள மாட்டார்கள். எனவே, கீழிருந்துமேல் சமூக பொருளாதார வாழ்வு ஜனநாயகமயப்படுத்தப்பட வேண்டும். சமூக அநீதிகள் களையப்பட்டு சமநீதி உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் இருக்கும் சமூகங்களுக்கும் அக புற நிலைகளில் சமூகநீதி உறுதிப்படுத்தப்பட வேண்டும். தமிழர் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மாத்திரமல்ல சக சமூகங்களின் உரிமைகள் பற்றியும் நாட்டின் சமூக பொருளாதார வாழ்வு பற்றியும் அக்கறை செலுத்த வேண்டும்.

நாம் நாகரீகமான மனிதர்கள் என உலகிற்குப் பறைசாற்றுவதாக இருந்தால் தமிழர்களுக்குள் நிலவும் கசடுகள் களையப்படவேண்டும்.

**மானிட நேயங்கொண்ட சமூக நீதியில் அக்கறைகொண்ட சக்திகள் ஒருங்கிணைந்து காத்திரமாகச் செயற்படுவது இன்றைய வரலாற்று அவசியமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போய் சேர முடியாத இடத்திற்கு வழி செல்வதற்கா தலைமை?

## தலைமைகள் மக்களுக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர அற்ப கீழ்த்தர உணர்ச்சிகளுக்கு தாளம் போடுவதாக அமையக் கூடாது

தமிழர்களின் தலைமை என்பது இருக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தி முன்னேறுவதற்கான சாத்தியங்களைப் பார்க்க வேண்டும்.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி... கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தாண்டி" என்ற நிலையை விட்டுவிட்டு இருக்கும் நிலைமைகளை செயற்படுத்திச் செல்ல முடியுமா என்பதை தமிழ் தலைமைகள் சிந்திக்க வேண்டும். இன்று இலங்கையில் குறைபாடுகள் இருப்பினும் ஜனநாயக இடைவெளி ஒன்று காணப்படுகின்றது. இந்த இடைவெளியை முறையாகப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறும் வழிகளை கண்டடைவதே மக்களுக்கு இருக்கக்கூடிய ஒரு பிரதான மார்க்கமாகும்.

போய்ச் சேர முடியாத இடத்திற்கு அலங் காரமான வார்த்தைகளில் வழிசொல்வது கபடத் தனமான வாய்ப்பந்தலாகும். அதனைத்தான் இன்று பிரதான தமிழ்த்தலைமையின் ஒருபகுதி யினர் செய்துகொண்டிருக்கின்றனர்.



தெற்கின் இனவாத சக்திகளைப் பலப்படுத் துவதன் மூலம் தமிழ் மக்கள் எதனையும் வென்று கொள்ள முடியாது என்பது வெளிப்படையான எளிமையான சூத்திரமாகும்.

கைப்புணனுக்குக் கண்ணாடி தேவை யில்லை. முதலில் இருக்கும் இடத்தை சுத்த மாகக்க வேண்டும். அதாவது மாகாண சபை களுக்கான அதிகாரங்களை உறுதிசெய்வது எவ்வாறு என்பதை சிந்திக்க வேண்டும். உலக மும் அதனைத்தான் நியாயம் என்று ஒத்துக் கொள்ளும்.

இருக்கிற இடத்தின் அத்திவாரத்தை கெட்டிப்படுத்தாமல் முகடு வைப்பதைப் பற்றிச் சிந்திக்க முடியாது.

இன்றைய உலக மயமாக்கல் சூழலில் பிராந் தியம் உலகத்துடன் இணைந்துதான் செயற்பட வேண்டும் செயற்பட முடியும். எனவே இன சமூகங்கள் தொடர்பாக உலகளாவிய அளவில் எட்டப்பட்ட பொது அறங்களை நாம் குரோதம், விரோதம், வக்கிரம் இல்லாமல் சுட்டிக்காட்ட முயல வேண்டும்.

குரோதமும் விரோதமும் தமிழ் ம்ககளுக்கு எந்த விமோசனத்தையும் பெற்றுத்தராது. இது கடந்து வந்த பாதையின் அனுபவமுமாகும். பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல் லம்.

இது இலங்கையின் அனைத்து சமூகங் களின் பிரதான தலைமைத்துவங்களுக்கும் பொருந்தும்.

இங்கு விதிவிலக்குகளைப் பற்றிக் குறிப்பிட வரவில்லை. பிரதான ஒட்டம் பற்றியே குறிப் பிடுகிறேன். இன சமூகங்களிடையே நம்பிக் கையை கட்டியெழுப்புவது சமூகங்களினுள் ஜனநாயகம் நிலவுவதுமே எமது இலக்கு. இந்த இலக்கு எய்தப்படுவதில் தான் இந்த நாட்டின் வெற்றி தங்கியிருக்கிறது.

தலைமைகள் மக்களுக்கு வழிகாட்ட வேண் டுமே தவிர அற்ப கீழ்த்தர உணர்ச்சிகளுக்கு தாளம் போடுவதாக அமையக் கூடாது.

இலங்கையின் அரசியல் முறைமை, பெரும் பான்மை சிறுபான்மை என்ற எண்ணக்கருக்கள் இந்த நாட்டை அழிவின் விளிம்பில் நிறுத்தியது என்பதை நாம் அனுபவ ரீதியாக அறிவோம்.

எனவே, சமூகங்கள் அருகில் வருவதற்கு நெருங்கி வருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதே முக்கியமான விடயமாகும். எண்ணிக்கை வகைப்பட்ட பெரியது, சிறியது என்பதை புறந் தள்ளி சமூகங்களிடையே சமத்துவத்தை உறு திப்படுத்த வெண்டும்.

2015 ஜனவரி 8 இல் நிகழ்ந்த மாற்றம் இலங்கையின் பல்லினத்தன்மையினாலேயே உருவானது. எனவே பல்லினத் தன்மையை பலப்படுத்துவதே முக்கியமானது. மற்றைய பிரிவினரிடையே காணப்படும் பயம் சந்தேகம் களையப்பட வேண்டும். சமூக வலைத்தளங்கள் பெருகிவிட்ட காலத்தில் நாம் வாழ்கிறோம். இங்கு தனி மனிதர்களே முக்கியத்துவம் பெறு கிறார்கள் இத்தகைய காலத்தில் சமூகங்களின் உரிமைகளை மறுப்பது பத்தாம் பசலித் தனமானதாகும்.

என்னதான் தெற்காசியாவின் பொருளாதார மையம் என்று கூறிக்கொண்டாலும் மக்களின் வாழ்வை ஜனநாயக மயப்படுத்தாதவரை பல்லி னங்களின் நாடாக இலங்கை தன்னை உறுதிப் படுத்தாதவரை சமூகநீதி சமூகங்களின் உள் ளும் வெளியிலும் நிலைநாட்டப்படாதவரையில் வெற்றிகரமான நாடு என்றநிலையை நாம் எய்த முடியாது.

இந்திய சுதந்திரத்தின் மூலவர்கள் இந்தி யாவை மதச்சார்பில்லாத நாடாக பிரகடனம் செய்தார்கள் சமூகத்தின் சகல பிரிவினரையும் கருத்துக்கெடுத்த அரசியல் யாப்பை உருவாக் கினார்கள் அது சுதந்திரம் பெற்றதிலிருந்து கெட்டிபட்டுப் போகாமல் கால ஓட்டத்திற்கேற்ப நெகிழ்வுத் தன்மை உடையதாக இருந்தது. அது அவ்வாறிருந்தபடியால் தான் மொழிவழி மாநிலங்கள், சமூக பொருளாதார நிலைமைகள் கருதிய மாநிலங்கள், ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த் தப்பட்ட வர்களுக்கான ஒதுக்கீடுகள் கால ஓட் டத்தின் ஊடே நிகழ்வதாயிருந்தது. அது இயங் கியல் தன்மை வாய்ந்ததாக இருந்தது.

மகாத்மாகாந்தி போதித்த அறம் ஜவஹர் லால் நேரு, டாக்டர் அம்பேத்தார் போன்றவர் களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. சுதந் திரப் போராட்டத்தின் உள்ளடக்கமாகவும் அத்தி வாரமாகவும் அது அமைந்தது. எமக்கு விரிந்த உலகப் பார்வை வேண்டும்.

இன்று இலங்கையின் அரசியல் யாப்பு சீர திருத்தம் பற்றிய பரவலான கருத்தறிதல் கலந் துரையாடல்கள் நாடளாவிய அளவில் நிகழு கின்றன. இது மிக முக்கயமான நிகழ்ச்சி. இங்கு பிரதானமானது மக்கள் கருத்தறிதல் அதிலும் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்தறிதல். அரச முறைகளில் மக்களின் முகத்தை முன் னிறுத்துவதற்கான செயற்பாடுகள் அவசியம்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பற் றிப் பேசும் தலைவர்கள் மக்களிடம் கருத்தறிவ தில் தமது நிலைப்பாட்டை மக்களுக்குச் சொல் வதில் மிக மிக அலட்சியமான பலவீனமான மனோநிலையினையே வெளிப்படுத்துகிறார்கள். இதில் அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதி நிதிகள் பொதுமக்கள் என்போர் வேறு வேறு என்ற நிலை உள்ளது ஒரு அந்நியமாதல் காணப்படுகின்றது.

இது ஒரு அதிகார போதை மமதை மன நிலையாகும். இந்த மனநிலை மாறவேண்டும். மக்கள் சார்பில் பேசும் விடயங்கள் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட வேண்டும். மக்களின் கருத் துக்கள் உள்வாங்கப்பட்டுச் செழுமைப்படுத் தப்பட வேண்டும். நவதாராளவாத உலகம் சாதா ரண மக்களை புறக்கணிப்பதைப் போலவே அரசியல் அதிகாரமும் அலட்சியம் செய்கிறது. இந்த அலட்சியம் பற்றி, மக்களின் பங்கு பற்றி மக்களுக்குப் போதமூட்ட வேண்டும். ஜனநாயக உணர்வுள்ள, மக்கள் மீது அக்கறை கொண்ட சக்திகள் இதனை முன்னெடுக்க வேண்டும்.

## வடக்க கிழக்கு இணைப் ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

**மேற்படி கட்சியின் மாநாடு ஏப்ரல் 23ம் திகதி அக்கரைப்பற்றில் நடைபெற்றது. கிழக்கு மாகாணம் வடக்கு மாகாணத்துடன் இணைக்கப்படக் கூடாது ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இரு மாகாணங்களும் இணைக்கப்படுமானால் சம அந்தஸ்துடையதாக தமிழர்களைப் பெரும்பான்மையாக கொண்ட ஒரு மாகாணமும், அதே போன்று முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாகாணமும் அமையக் கூடியதாக மாகாண எல்லைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று தேசிய காங்கிரஸ் கட்சியின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை முன்வைத்துள்ள அரசியலமைப்பு மாற்றத்திற்கான யோசனையில் வடக்கு கிழக்கு இணைந்த சமசுஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வை கோரியுள்ளது. சுஷஇணைந்த வடக்கு கிழக்கில் தமிழ் மொழி மாகாணசபை ஒன்றும் முஸ்லிம்களுக்கும், மலையக மக்களுக்கும் தனித் தனி அலகு என்று குறிப்பிட்டுள்ள அந்த தீர்மானம் ஒருதலைப்பட்சமான தீர்மானம்சுஷ என்று தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.**




**2006ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் மூதூர் சம்பூரில், புலிகளுக்கும் அரச படை களுக்கும் இடையில் இடம்பெற்ற மோத லில் இடம் பெயர்ந்த மக்கள் கிளிவெட்டி யில் முகாம்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். அண்டை நாடான இந்தியாவிலும் தஞ்சம் புகுந்தனர். 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னரும் சம்பூர் மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியிருப்பதற்கு ராஜ பக்ஸாக்களின் முன்னாள் அரசு தடை விதித்திருந்தது. இந்த மக்களை சம்பூரில் மீண்டும் குடியமர்த்துவதற்காக பல அரசி யல் தலைவர்களும் சமூக இயக்கங்களும் போராட்டங்களை நடத்தியது எல்லோரும் அறிந்ததே. இந்தப் போராட்டங்களின் தொடர்ச்சியிலே 2015ம் ஆண்டு நல்லாட்சி கோஷத்துடன் மைத்திரியின் அரசு அமைந் தது. சம்பூர் மக்களுக்கு நல்ல காலம் பிறந்தது. சம்பூர் நிலத்தில் பாதி உடன் விடுவிக்கப்பட்டது. மக்கள் மெல்ல மெல்ல குடியேறினார்கள். விடுவிக்கப்படாத மீதி நிலங்களில் அமைந்த கடற்படை முகாம் 2016 ம் ஆண்டு மார்ச் மாதம் அகற்றப்பட் டுள்ளது. சம்பூர் முடிவில் உள்ள கடற்கரை பகுதியில் கடற்படையினரின் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.**

**முகாமில் இருந்து தமது நிலங்களில் மீளக் குடியமர வந்த மக்களுக்கு எந்த விதமான உதவிகளும் கிடைக்கவில்லை. "உங்க ளின் நிலங்களை அடையாளம் கண்டு, தற்காலிய கொட்டில் அமைத்து இருந்தால், நிரந்தர வீடுகள் கட்டி தரப்படும்". என அரசு உயர் அதிகாரிகளும் கிராம அலு வலர்களும் தெரிவித்துள்ளனர். இவர்களின் உறுதி மொழியை நம்பி , தகரங்களாலும் தென்னை ஓலைகளினாலும் தத்தமது தற் காலிக கொட்டில்களை அமைத்துள்ளார் கள். ஆனால், இந்த மக்களுக்கு மலசல கூடம், குடிநீர் , மின்சாரம் என்ற அடிப்ப டையான வசதிகள் கிடையாது.**

**இந்த மக்களின் வாக்குகளை வாங்கிய அரசியல்வாதிகள் கொஞ்சம் கால் நடை யாக மக்களின் கூடாரங்களுக்கு நடந்து சென்றால், இந்த மக்கள் படும் அவஸ்தை அவர்களுக்குத் தெரியவரும்.**

**எமது மக்களுக்குக் கிடைக்காது என்றி ருந்த இந்த சம்பூர் நிலங்கள் மக்களுக்கு கிடைத்து விட்டது. இந்த மக்கள் நிரந்தர மாக குடியமருவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக் கப்பட வேண்டும்.**

**அரசியல்வாதிகளும், சமூக சேவையாளர் களும் பத்திரிகை செய்திகளுக்காக வலம் வரும் பிரமுகர்களாக இருப்பதை நிறுத்தி விட்டு, இந்த சம்பூர் மக்கள் படும் கஷ்டங் களை போக்க உங்களால் முடிந்த உதவி களை செய்யத் தொடங்குங்கள். அரசு உதவி செய்யும் எனக் காத்திராமல், முதலில் நமது மக்களுக்கு நாம் உதவ வேண்டும். அப்போது தான் சம்பூரை எமது மக்களின் நிலங்களை நிரந்தரமாக்க முடியும்.**

**சத்தியன்**

## சமஸ்டி தீர்வு ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )


இனம் மதம், சாதி, பால் அடிப்படையில் உருவாக்கப்படும் தீர்வை ஜேவிபி எதிர்ப்பதா கவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை போக்கும் நோக்கத்தில் வடக்கு மாகாண முதல மைச்சர் இனவாதத்தை தூண்டும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி என தகவமைப்பு


# கட்சி காங்கிரஸில் தீர்மானம்



பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் காங்கிரஸிற்கான தயாரிப்புக்களை செய்வதற்கான முன்அமர்வு 30.03.2016 அன்று யாழ். வை..எம்..சி..ஏ மண்டபத்தில் பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் தோழர் சுகு (தி. ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது.



காங்கிரஸிற்கான முன் அமர்வின் போது கட்சியின் நகல் அரசியல் திட்டம், கட்சி அமைப்பு விதி என்பன குறித்து பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வந்திருந்த தோழர்கள் குழுக்களாக குழுநிலை விவாதங்களை நடாத்தி திருத்தங்களையும், ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.




கைதடி விநாயகர் திருமண மண்டபத்தில் ஏப்ரல் 2ம் திகதி முழு நாள் நிகழ்வாக பத்மநாபா ஈபிஆர்எல்எவ் கட்சியின் காங்கிரஸ் நடைபெற்றது. காங்கிரஸை நடாத்தி முடிப்பதற்காக தெரிவ செய்யப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் - தோழர் கங்கா, தோழர் அலெக்ஸ், தோழர் மதன் - முன்னிலையில் தோழர் வரதராஜப்பெருமாள் கட்சியின் நோக்கம், குறிக்கோள் மற்றும் கட்சியின் வேலைத்திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய கட்சியின் அரசியல் திட்டத்தினை வாசித்து, விளக்க உரையாற்றினார்.



யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் ஏப்ரல் 3ம் திகதி மாலையில் தோழர் சாந்தன் தலைமையில் நடைபெற்ற கட்சி காங்கிரஸ் தீர்மானங்களை அறிவிக்கும் பகிரங்க கூட்டத்தில் மூத்த அரசியல்வாதியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் காங்கிரஸ் மாநாடு ஏப்ரல் 2ம் திகதி நடைபெற்றது. காங்கிரஸிற்கான தயாரிப்புக்களை மேற்கொள்ளும் முன் அமர்வு மார்ச் 30 ஆம் திகதி முழுநாள் நிகழ்வாக யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம்பெற்றது. வடக்கு கிழக்கிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வருகை தந்திருந்த கட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு கட்சியின் எதிர் காலத்திற்கான அரசியல் திட்டம், கட்சியின் ஸ்தாபனக் கட்டமைப்பு விதிகள், கட்சியின் மூல வேலைத்திட்டம், கட்சியின் புதிய தலைமைக்கான தெரிவுகள், நியமனங்கள், கட்சியின் பெயர் மாற்றம் என்பன பற்றி கருத்து பரிமாறி தீர் மானங்கள் மேற்கொள்ளப்பட்ட கட்சிக் காங்கிரஸ் மற்றொரு முழு நாள் நிகழ்வாக ஏப்ரல் 2ம் திகதி கைதடியில் அமைந்துள்ள விநாயகர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. காங்கிரஸ் தீர்மானங்களை அறிவிக்கும் பகிரங்க கூட்டம் யாழ் றிம்மர் மண்டபத்தில் ஏப்ரல் 3ம் திகதி மாலையில் நடைபெற்றதோடு கட்சி காங்கிரஸ் கூட்டத்தொடர் நிறைவெய்தியது.

ஈபிஆர்எல்எவ் இயக்கத்தை அழித்தொழிக்கும் அரசியல் அரங்கிலிருந்து அகற்றும் நோக்குடன் புலிகள் தாக்குதல் தொடுத்து 40 வருடங்களை கடந்துவிட்ட போதும் எமது செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா உட்பட ஆயிரக்கணக்கான தோழர்களை புலிகள் படுகொலை செய்த பின்னரும் ஈபிஆர்எல்எவ் இன் இலட்சியங்களை தொடர்ந்து முன்னெடுத்து வரும் பத்மநாபா ஈழமக்கள் புரசிகர விடுதலை முன்னணி தமிழ் மக்களின் சுபிட்சமான எதிர்காலத்திற்கும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குமான அரசியல் வேலைத்திட்டம் குறித்தும் அவ் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான கட்சி அமைப்பு குறித்தும் ஆராயும், தீர்மானிக்கும் கட்சிக் காங்கிரஸை நடாத்தியிருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அது மாத்திரமல்ல வெலிக்கடைச் சிறைப் படுகொலையை ஒத்த கந்தன் கருணைப் படுகொலையை நாடாத்தி புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட ஈபிஆர்எல்எவ் தோழர்களை படுகொலை செய்த அதே தினத்தில் -பங்குனி 30- இக் காங்கிரஸ் முன்அமர்வு நடைபெற்றது குறிப்பிடத் தக்கதாகும். புலிகளின் தாக்குதலை தொடர்ந்து பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் தஞ்சமடைந்த எமது தோழர்கள் பலர் இலட்சிய உறுதியோடு இக்காங்கிரசில் பேராளர்களாக கலந்துகொண்டனர். அத்துடன் ஜேர்மனி, கனடா, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து இங்கிலாந்து ஆகிய நாடுகளில் வசிக்கும் எமது தோழர்களே இக் காங்கிரஸை நடாத்தி முடிப்பதற்கான அனைத்துச் செலவுகளுக்குமான நிதியை வழங்கியிருந்தனர்.

மேற்படி காங்கிரஸில் கட்சியின் அரசியல் திட்டம், கட்சியின் அமைப்பு விதி என்பன அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. கட்சியின் தலைவராக தோழர் சுகு (தி.ஸ்ரீதரன்) தெரிவ செய்யப்பட்டதுடன். வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களையும், வெளிநாடுகளில் வதியும் தோழர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையிலும், கட்சியின் எதிர்கால வேலைத்திட்டத்தினை பரவலாக முன்னெடுக்கும் வகையிலும் 23 பேர் கொண்ட மத்திய செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்ற பெயர் தனி நாட்டுக் கோரிக்கை யுடனும் அதனை வென்றெடுப்பதற்கான ஆயுதப்போராட்டத்துடனும் தொடர்புடை யது. எனவே தனிநாட்டு கோரிக்கை, ஆயுதப்போராட்டம் என்பதற்கு மாற்றாக ஒன்றுபட்ட இலங்கைக்குள் அரசியல் அதிகாரத்தை கோருபவர்கள் என்ற வகையில் பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என பதிவு செய்யப்பட்டுள்ள கட்சியின் பெயரை மாற்றி தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி என்ற புதிய பெயர் கட்சியின் பெயராக தேர்தல்கள் ஆணையகத்தில் பதிவு செய்வதென தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில், பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் அரசியல் ரீதியில் உடன்பாடுகள் உள்ள, சமூக பிரக்ஞை உள்ள பல்வேறு சக்திகளுடனும் இணைந்து செயற்படுவதற்கும், தென்னிலங்கை இடதுசாரிகள் மற்றும் ஜனநாயக சக்திகளோடு நெருங்கி செயற்படுவதற்கும், சிங்கள மக்கள் மத்தியில் எமது கோரிக்கைகளின் நியாயத் தன்மையை எடுத்துக் கூறி வலியுறுத்துவதற்கும் இந்த பெயர் மாற்றம் அவசியம் என்று கருதப்பட்டது.

அதேவேளை தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் தோழர் பத்மநாபா வளர்த்தெடுத்த பாரம்பரியங்கள் பதித்த தடங்களின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உண்மையான வரலாற்றுத் தொடர்ச்சியான பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்களையும், இறந்த தோழர்களின் குடும்ப உறுப்பினர்கள், ஆதரவாளர்களையும் இணைத்த வகையில் இனிவரும் காலங்களில் பத்மநாபா மக்கள் முன்னணி என்னும் பெயரில் மக்கள் இயக்கமாக செயற்படுவது எனவும் தோழர் பத்மநாபா மீதும் அவரது செயல்கள் மீதும் பற்றும் பிடிப்பும் உள்ள தோழர்களை, ஆதரவாளர்களை ஒன்றிணைக்கும் வகையில் இந்த பத்மநாபா மக்கள் முன்னணி அவரது நோக்கங்களையும், செயல்களையும் முன்னெடுத்துச் செல்லும் எனவும் இக்காங்கிரஸில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் காங்கிரசில் நிறைவேற் றப்பட்ட 34 தீர்மானங்கள் அடங்கிய அரசியற்திட்ட பிரகடனம் 03.04.2016 அன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் தீர்மானங்கள் அறிவிக்கும் பகிரங்க கூட்டத்தில் வாசிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்

### தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி ஆதரவு



தொழிலாளர் தினமான மே 1 இல் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி திருகோணமலையில் தொண்டர் ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் ஊர்வலம் ஒன்றையும் நடாத்தினர். கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சம்மேளனம் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தையும், ஊர்வலத்தையும் ஏற்பாடு செய்திருந்தது.

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்தை துரிதப்படுத்துங்கள். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தீர்வு கிடைக்கச் செய்யுங்கள். தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் அரசியல் செய்யாதீர்கள் என்பன தொண்டர் ஆசிரியர்கள் முன்வைத்திருந்த கோரிக்கைகளாகும்.

திருகோணமலை மாவட்ட தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் சார்பில் தோழர்கள் சத்தியன், குமார், மோகன் ஆகியோர் தொழிலாளர் தினத்தன்று இடம்பெற்ற தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதம் மற்றும் ஊர்வலத்தில் பங்குகொண்டு தொண்டர் ஆசிரியர்களுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

# திருகோணமலை வாசியின் ஆதங்கம்

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் செய்யப்படும் வேலைகள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவனவாக இல்லை. திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் கடந்தகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கஷ்டம், துன்பங்களுக்குத் தீர்வு காண்பதற்கான வேலைத் திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மக்கள் வாழ்வாதாரமின்றி, பிரச்சனைகள் தலைதூக்கி இருக்கும் இக்காலகட்டத்தில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை முறையாக அடையாளம் கண்டு தீர்வுகாண்பதற்கு முயற்சிக்காமல் கோயில்களுக்கு வர்ணம் பூசுவதற்கும், கோயிகளை உடைத்துக் கட்டுவதற்கும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் போட்டி போட்டுக்கொண்டு நிதி ஒதுக்கியுள்ளனர். இந்து கோயில்களுக்கும், தேவாலயங்களுக்கும் பள்ளிவாசல்கள் மற்றும் விகாரைகளுக்கும் இவ்வாறு நிதி ஒதுக்கியுள்ளனர்.

வாக்கு வாங்கும் போது எல்லோரையும் சந்தித்தீர்கள். மக்களின் வாக்கு பலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களாக, மாகாண சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட எல்லோரும் ஒரே இடத்தில் மக்களை சந்தித்ததுண்டா? வாக்கு கேட்கும் போது மக்களை சந்தித்தவர்கள் எமது நிதியின் கீழ் எமது மாவட்டத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை கேட்கும் சந்திப்பு எதனையும் நடத்தியதுண்டா? மக்களின் தேவையை அறியாமல் ஏன் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன? குடிநீர் குழாய் போகாத இடம் எவ்வளவோ எமது மாவட்டத்தில் உள்ளன என்பது இந்த உறுப்பினர்களுக்குத் தெரியாதா? இந்த குடிநீர் பிரச்சனைக்கு தீர்வுகாண கடந்த வருடம் 10 வீதம் கூட நிதி ஒதுக்கப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாணசபை உறுப்பினர்களுக்கும் வேலைத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் வருடந்தோறும் கிடைக்குமென்பது ஏற்கனவே தெரிந்திருந்தும் முன்கூட்டியே மக்களின் ஆலோசனைகளை கேட்டு அதற்கு ஏற்றவாறு வேலை திட்டங்கள் செயற்படுத்தப்படுவது கிடையாது.

வருட முடிவில் திட்டம் ஏதும் கையில் இல்லாத நிலையில் கோயில்களுக்கு நிதியை ஒதுக்கிவிட வேண்டியது தான் இல்லாவிடில் ஒரு வருடத்துக்கான ஒன்றறை கோடியும் திரும்ப போய்விடும்.

யுத்தகாலத்தில் ஊனமுற்றோர் எம்மத்தியில் அதிகமாக உள்ளனர். வடக்கு கிழக்கில் அவர்களுக்கு காப்பகங்களோ அல்லது உயிர்வாழ்வதற்கான வாழ்வாதாரங்களையோ ஏற்படுத்தும் திட்டம் எதனையும் முன்னெடுத்ததாகத் தெரியவில்லை.

யுத்தத்தில் ஊனமான இராணுவ வீரர்கள் காக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு காப்பகம் அமைத்து அவர்களின் திறமைகளுக்கு ஏற்ப வேலை வழங்கப்படுகின்றது. விளையாட்டுகளிலும் ஈடுபடுகின்றார்கள். இதை அரசே செய்கின்றது. வடக்கு கிழக்கில் யுத்தத்தில் பாதிப்படைந்து ஊனமுற்ற இளைஞர்கள் யுவதிகள் குழந்தைகள் ஒருவேளை உணவுக்கு கூட கஷ்டப்படுவதை மீண்டும், மீண்டும் கேள்விப்படுகின்றோம். இவர்களுக்காக ஏன் எமது பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் திட்டங்கள் எதனையும் இன்னும் நடைமுறைபடுத்தவில்லை? என்பது தமிழ் மக்கள் முன் உள்ள கேள்வியாகும்.

# மக்கள் மத்தியிலிருந்து...

## தமிழ் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் கவனத்திற்கு

- மக்களின் அன்னறாட இன்ப துன்பங்களில் கவனம் செலுத்த முயலுங்கள்
- பொது வைத்தியசாலைகளில், கச்சேரியில், பிரதேச செயலகங்களில், கிராம சேவகர் அலுவலகங்களில் மக்கள் எவ்வாறு சேவைகளைப் பெறுகிறார்கள் என்பதை நேரடியாக அறிய முயலுங்கள்.
- சேவைகளை அன்புடன் மக்களின் சுயமரியாதை பாதிக்கப்படாத விதத்தில் வழங்க அறிவுறுத்துங்கள்
- பொதுப்போக்குவரத்து தனியார் போக்குவரத்தில் மக்கள் மிதிபட்டு அவலப்பட்டு, பிரயாணம் செய்வதை கொஞ்சமேனும் அனுபவித்துப் பாருங்கள்.
- பொதுக் களிப்பிடங்களின் நிலை என்ன என்பதை நேரடியாக சென்று பாருங்கள்.
- அத்தியாவசிய பொருட்களின் விலை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியானவையாக இருக்கிறதா என்பதை கவனியுங்கள்.
- கிராமப்புற தொலை தூர பாடசாலைகளில் கல்வி என்ன நிலையில் இருக்கிறது என்பதை சாதாரண மனிதர்களைப் போல் சென்று அவதானியுங்கள்
- பொலிஸாரின் அலட்சிய மனோபாவம், இலஞ்சம் பற்றிய விடயங்களை உங்கள் அதிகாரங்களை பாவித்து உயர் அதிகாரிகளை அழைத்து பேசுங்கள் தீர்வுகாண முயலுங்கள்.
- விவசாயிகள், அவர்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சினைகளை பரிவுடன் அணுகுங்கள்.
- சமூகத்தில் பெருகிவிட்ட வன்முறைகளை காரணங்களை கண்டறிந்து தீர்வுகாண முயலுங்கள் வெறும் அறிக்கை விடுவதோடு நின்றுவிடாதீர்கள். குறிப்பாக சிறுவர்கள் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றி கூடுதல் கரிசனை கொள்ளுங்கள்.
- தொலை தூர, குறுந்தூர பொதுப் போக்குவரத்தை அதிகரிக்க வழிசெய்யுங்கள். அதனை சௌகரியமாக மாற்ற முயலுங்கள்.
- இளைஞர்களை அழைத்துப் பேசி அவர்களின் மனநிலை என்ன என்பதை அறிய முயலுங்கள் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான வழிவகைகளை கண்டறியுங்கள்.
- தண்ணீர் இயற்கை மாசடைவது பற்றிய கரிசனைகளை கருத்தூன்றி அவதானித்து இவற்றுக்கான தீர்வுகளை கண்டறிய முயலுங்கள்.
- சமூகத்தில் அனுபவ ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் நிபுணத்துவம் பெற்றவர்களின் ஆலோசனைகளைப் பெற முயலுங்கள்.
- அரச அதிகாரிகள் சேவையாளர்களை அவர்களின் காரியாலயங்களுடன் மட்டுப்படுத்தாமல் களத்தில் இறங்கி வேலை செய்வதற்கு ஊக்குவியுங்கள்.
- கழிவுகளை அகற்றுதல், டெங்கு போன்ற கொடிய நோய்கள் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆய்வுகளை மேற்கொள்வதையும் தீர்வுகளை காண்பதையும் ஊக்குவியுங்கள். கழிவகற்றலில் மீள் சுழற்சி முறையை நடைமுறைச்சாத்தியமாக்குங்கள்.
- பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் ஆதரவற்றோர். மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்த முயலுங்கள்
- அகதிகள் இல்லாத தேசம் என்ற நிலையை உருவாக்க முயலுங்கள்.
- சக சமூகங்களுடன் நட்புறவை ஊக்கப்படுத்துங்கள். கலாசார பரிவர்த்தனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.
- தமிழ் சமூகத்தில் நிலவும் சமூக அநீதிகளை கண்டும் காணாதது போல் இருக்காதீர்கள், மூடி மறைக்க முயலாதீர்கள்.
- சமூகப்பாதுகாப்பு என்பது உங்கள் குறிக்கோளாக இருக்கட்டும்.
- உங்களை தெரிவு செய்த மக்களை மறக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா மீண்டும் முதல்வராவாரா? மாற்றம் வருமா?

**இந்த தேர்தல் அறிக்கைகள் தேர்தல் காலங்களில் கட்சிகள் ஆட்சியை பிடிப்பதற்கு செய்யும் தந்தரோபாயம் என்ற கருத்து மக்களிடம் உள்ளதால் தேர்தல் அறிக்கையின் மூலம் மக்கள் மனதை மாற்றிவிடலாம் என்ற கட்சிகளின் நம்பிக்கை பொய்யாகத்தான் போகும்**

அருள் விஜயன்

தமிழ்நாட்டிற்கான தேர்தல் மே 16 நடைபெற்று முடிவுகள் மே19 வெளி வரவுள்ளது. இம்முறை யார் ஆட்சி அமைக்கப் போகிறார்கள் என எதிர்வு கூறமுடியாமல் இருக்கிறது தமிழக கள நிலவரங்களை பார்க்கும் போது. யாருக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைத்து விடும் எனபதும் சந்தேகமே

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் கூட்டணிகள் கட்சித்தாவல்கள் கூட்டணி சேர்க்கைகள், பிரிப்புகள் கழட்டி விடப்பட்ட நிலைமைகள் என ஒரே அல்லோலகல்லோலப்பட்ட வண்ணம் இருக்கின்றன தமிழக கட்சிகள்.

இறுதியாக தமிழகத்தின பிரதான இருகட்சிகளான அ.தி.மு.க கூட்டணி, தி.முக கூட்டணி மற்றும் மக்கள்நலக் கூட்டணி, பா.ஜ.கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, வேல்முருகனின் தமிழர் வாழ்வுரிமைக் கட்சி, மற்றும் சீமானின் நாம் தமிழர் கட்சி என ஏழு முனைப்போட்டி என்ற நிலைமை ஏற்பட்ட போதிலும் தமிழகத்தின் இரண்டு பிரதான கட்சிகளுக்குமிடையில் தான் கடுமையா போட்டி நிலவுகிறது. இது அவர்களின் வாக்கு வங்கியினை வைத்தே சொல்லப்படும் ஒரு கணிப்பாக உள்ளது.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எல்லாமே தேர்தல் அறிக்கைகள் வெளியிட்டுள்ளன. முதலமைச்சர் வேட்பாளர்களையும் அறிவித்து தேர்தல் பிரசாரங்களிலும் ஈடுபட்டுவருகின்றன. கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளைப் பார்க்கும் போது யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழக மக்களுக்கு எல்லாமே கிடைத்து அவர்கள் எந்தவித துன்பங்களையும் சந்திக்காதவண்ணம் ஆட்சியாளர்கள் பார்த்துக் கொள்வார்கள் போல தெரிகிறது. சில கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் பல விடயங்கள் மாறு பட்டதாகவும் புதுமையாகவும் உள்ளது. மது ஒழிப்பு தொடர்பாக சகல கட்சிகளும் உறுதியாக உள்ளது. அதனை இவர்கள் செய்வார்களா என்பது சந்தேகமே!

இந்த தேர்தல் அறிக்கைகள் தேர்தல் காலங்களில் கட்சிகள் ஆட்சியை பிடிப்பதற்கு செய்யும் தந்தரோபாயம் என்ற கருத்து மக்களிடம் உள்ளதால் தேர்தல் அறிக்கையின் மூலம் மக்கள் மனதை மாற்றிவிடலாம் என்ற கட்சிகளின் நம்பிக்கை பொய்யாகத் தான் போகும். தேர்தல் அறிக்கைகளில் கட்சிகளிடையே போட்டி காணப்படுவதை உணரக்கூடியதாக உள்ளது. புதுமையான விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் கட்சிகள் ஏதோ கண்டுபிடிப்புகளை வெளியிடுவது போல் அதனைச் செய்கிறார்கள்.

ஆட்சிமாற்றம் என்ற சிந்தனை பலரிடம் காணப்படுகின்ற போதும் அதனை யார் அறுவடை செய்வார்கள் என்பதே இங்கு கேள்விக் குறியாக உள்ளது. மக்கள் நலக்கூட்டணியா? அல்லது தி.மு.கவா? மக்கள் நலக் கூட்டணி மேல் ஒரு நம்பிக்கையின்மை காணப்படுகிறது. இதே போல் தி.மு.க விலும் நம்பிக்கை கொள்ள மாற்றத்தை விரும்புகிறவர்கள் தயாராக இருப்பதாக தெரியவில்லை.

இன்னுமொரு பிரதான விடயம் இந்தத் தேர்தலில் பிரதிபலிக்கக் காத்திருக்கிறது. சில மாவட்டங்களிலும் சில தொகுதிகளிலும் தி.மு.க, அ.தி.மு.க தவிர மற்றய கட்சிகள், கூட்டணிகளுக்கு வாய்ப்புகள் காணப்படுகிறது. இதனால் தமிழகத்தின் பிரதான கட்சிகளுக்கு அந்தப் பகுதிகளில் பலத்த சவால்கள் காணப்படும்.

மாற்றம் வேண்டும் என நினைப்பவர்களுக்கு இது ஒரு சந்தர்ப்பம் இதனை நீங்கள் தவறவிட்டால் தமிழ்நாட்டில் இனி மாற்றம் ஏற்படுத்த முடியாது ஆகவே எமக்கு வாங்களியுங்கள் என மக்கள் நலக் கூட்டணியினர் சொல்கிறார்கள்.




தமிழ்நாட்டில் நான் சொன்னதையும் செய்வேன் சொல்லாததையும் செய்வேன் ஆகவே எனக்கு வாக்களியுங்கள் என தற்போதைய முதல்வர் ஜெயலலிதா கூறிவருகிறார்.

தி.மு.க வோ தற்போதைய ஆட்சியை அகற்ற வேண்டும் நாங்கள் உங்களுக்கு நல்ல ஆட்சியைத் தருவோம் எனக் கூறுகிறார்கள்.

பா.ஜ.க கட்சியும் நல்ஆட்சியை தருவோம் தற்போதைய முதல்வர் மத்திய மந்திரிகளாலே பார்க்க முடியாமல் உள்ளது எங்களை ஆதரியுங்கள் எனக் கூறுகிறார்கள்.

பாட்டாளி மக்கள் கட்சி மாற்றம் முன்னேற்றம் என்ற கோசத்துடன் வலம் வருகிறது. எங்களது ஆட்சி அமைந்தால் நான் உங்களை வீடு வீடாக வந்து பார்க்கும் ஒரு முதல்வரகா இருப்பேன் என்கிறார்.

வேல்முருகனும் தனது பகுதியில் தனது மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவேன் எனக் கூறிவருகிறார்.

சீமானும் எதையோ எல்லாம் சொல்கிறார் ஆடு, மாடுகள் மேய்ப்பதை அரச தொழில் ஆக்குவேன் என்றெல்லாம் கூறுகிறார்.

இவையெல்லாவற்றையும் வாக்காளர்கள் அவதானமாகப் பார்க்கிறார்கள், கேட்கிறார்கள். அவர்கள் மாற்றத்தை ஏற்படுத்துவார்களா? அல்லது மீண்டும் ஜெயலிதாவையே ஆட்சியில் அமர வைப்பார்களா? என்பதற்கு நாம் மே19 வரை காத்திருக்கத்தான் வேண்டும்.

---

## பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர .... (1 ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு தரப்பினரின் பிரச்சினைகள் குறித்தும் இந்த அரசியல் திட்டப் பிரகடனம் கவனம் செலுத்தியிருப்பதுடன் பொருளாதாரம், சுற்றுச் சூழல் பிரச்சினைகள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் குறித்தும் தீர்மானங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இறுதியாக அனைத்து அரசியல், சமூக சக்திகளும் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈ.பி.அர்.எல்.எவ் இன் ஸ்தாபகர்களில் ஒருவரும், கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான தோழர் சாந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மூத்த அரசியல்வாதியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான திரு.வீ. ஆனந்தசங்கரி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் (தோழர் அசோக்), ரெலோ கட்சியின் சார்பில் ஹென்றி மகேந்திரன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) அமைப்பின் சார்பில் மாகாணசபை உறுப்பினர் க. சிவனேசன் (தோழர் பவான்), ஈபிடிபி சார்பில் தோழர் விந்தன், புதிய பண்பாட்டு தளத்தின் சார்பில் லெனின் மதிவாணன், சர்வதேச மார்க்ஸிய குழுவைச் சேர்ந்த சொ.சிவபாலன், கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையத்தின் சார்பில் தோழர் சசி, லங்கா சமசமாஜ கட்சியின் சார்பில் தோழர் தமிழ்அழகன், மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்ததுடன் கட்சியின் வேலைத்திட்டங்கள் வெற்றி பெற வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

மக்கள் ஜனநாயக மையத்தின் சார்பில் வசந்த திசநாயக்க சிங்களத்தில் உரையாற்றினார். அவரது உரையை விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன் தமிழில் மொழிபெயர்த்தார்.

இக் கூட்டத்திற்கு வருகைதர முடியாத நிலையில் தென்னிலங்கையின் நட்பு சக்திகளான இடதுசாரி கட்சிகளை சேர்ந்த பலர் வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்திருந்தனர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டியு குணசேகரா, லங்கா சமசமாஜ கட்சி பெரும்பான்மை குழுவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்கிரமரட்ணா இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மாற்றுக்குழுவின் செயலாளர் தோழர் ஹேமா வில்பெட், ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளும் வாசிக்கப்பட்டன. இறுதியாக தோழர் அலெக்ஸ் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டத்தை முடித்து வைத்தார்.

## நழுவிப் போய்விடக் ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பாரிய இடைவெளி காணப்படுகிறது.

சமூகத்தில் தொடர்ந்து மிதமிஞ்சிய சலுகை பெற்ற அணியினர் என்று ஒரு பகுதியினர் உருவாகியிருக்கிறார்கள்.

இவர்கள் அதிகாரத்தில் இருப்பவர்கள். இவர்களின் தனிப்பட்ட குடும்பம் உற்ற சுற்றத்தவர்களின் நலன்கள் முன்னிலை பெறுகின்றன.

இந்தப்போக்கு வேகமாக மக்களை அவநம்பிக்கை வாதத்திற்கு இட்டுச் செல்லும்.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் சமூகப் பிரக்ஞை கொண்ட அரசியல் சக்திகள் இணைந்து செயற்படவேண்டும்.

இவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

நிதானமான நீதியான சகல சமூகங்களையும் கருத்திற்கெடுத்த சம நிலையான அணுகுமுறை இல்லாவிட்டால் மக்கள் விரோத சக்திகள் தலைதூக்கும் சாத்தியத்தை மறுதலித்து விடமுடியாது.

## 4வெயில்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மிஞ்சிய அதிகரிப்பு என்பன மனித குலத்தின் இருப்பு பாதுகாப்பு பற்றிய அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளன.

வெப்பமான கால நிலையில் மிதமிஞ்சிய நீரை அருந்துவது . நீர்ச்சத்துள்ள பழங்கள் மற்றும் பானங்களை அருந்துவது அவசியமானது.

முதியவர்கள் நீராகாரம் அருந்துவது குறைவாகையால் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

அடிக்கடி உடலில் நீரை ஊற்றிக் கொள்வது நல்லது.

எமது கல்வி அமைச்சு அதிக வெப்பம் பெருவெள்ளம் நிலவும் நாட்களில் பாடசாலைகளுக்கு தற்காலிக விடுமுறை அறிவிப்பது நல்லது.

உலகின் வெப்பத்தைக் குறைப்பதற்கான பாரிஸ் மாநாடு முடிவடைந்து ஒரு வருடத்திற்குள்ளாகவே சரித்திரம் கண்டிராத வெய்யிலைச் சந்திக்கிறோம்.

இவ்வாறு உலகின் வெவ்வேறு பகுதிகளில் மனிதர்கள் காலநிலைக் குழப்பங்களை அனுபவிக்கிறார்கள்.

இந்தப் புவியில் வாழ்வதற்கான நிபந்தனைகள் மனிதர்களால் தான் அழிக்கப்பட்டன. மனிதர்கள் தான் அதனை மீள் நிலைநிறுத்த முயற்சிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பலைக்குள் திக்குமுக்காடும் 65000 வீட்டு திட்டம்

-சித்திரகுப்தன்-

2009ல் யுத்தம் முடிவடைந்த பின்னர் அகதிகளான இலட்சக்கணக்கான மக்களை மீளவும் குடியேற்றம் செய்வதென்பது பெரும் சவாலாக அமைந்தது.

அதற்கு உடனடியாக உதவ முன்வந்த ஐக்கிய நாடுகள் சபை நிறுவனம் ஒவ்வொருவருக்கும் மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான உதவிகளை வீடு கட்டுவதற்காக என பல ஆயிரக்கணக்கானோருக்கு வழங்கியது.

மறவன்புலவு கிராமத்தில் வீடமைப்புத் திட்டத்தை தத்தெடுத்துக் கொண்ட சுவிற்சர்லாந்து நாட்டு நிறுவனம் ஒன்று ஐந்தரை இலட்சம் ரூபா பெறுமதியான நூற்றுக் கணக்கான வீடுகளை நேரடிக் கண்காணிப்பின் கீழ் அவ்வூர் மக்களுக்குக் கட்டிக் கொடுத்தது.

பின்னர் இவ்விடயத்தில் பாரிய அளவில் உதவி புரிய முன்வந்த இந்தியா வீட்டுக்கு ஆறு லட்சம் பெறுமதியான உதவிகள் என 50000 வீடுகளை நன்கொடையாக வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

இப்போது, இலங்கை அரசாங்கம் புனர்வாழ்வு அமைச்சினூடாக நேரடியாக 21 லட்சம் ரூபா பெறுமதியான 65000 வீடுகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப் போவதாகக் கூறி அதற்கான நடவடிக்கைகளிலும் தீவிரமாக இறங்கியுள்ளது. அதற்கான மாதிரி வீடுகளையும் யாழ்ப்பாணத்தில் கையளித்துள்ளது.

இந்த வீடு வழமையான முறையில் கல்லு, மணல், சீமெந்து, ஓடு என்பவற்றைக் கொண்டு கட்டப்பட்டது அல்ல. மாறாக, நவீனரீதியல் வடிவடைக்கப்பட்டு, இரும்பு, தகரம், மரப் பொருட்கள் போன்றவற்றைக் கொண்டு, முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட வீடாகும். இது அளவுரீதியில் முன்னைய உதவி வீடுகளை விட சற்று பெரியதாகும். உள்ளிட வசதிகளை அதிகமாகக் கொண்டதாகும். காற்று மற்றும் சூரிய வெளிச்ச வசதிகளைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டுதவித் திட்டத்தில் வெறுமனே வீடு மட்டுமன்றி, சூரிய சக்தி மூலமான மின்சார வசதிகளும் உள்ளடங்குகின்றன.

மேலும் வீட்டுப் பாவனைக்குத் தேவையான 1) காஸ் அடுப்பு மற்றும் காஸ் சிலிண்டர் 2) வீட்டுப்பாவனைப் பொருட்கள், 3) ரிவி மற்றும் மடிக்கணணி ஆகியவற்றை வழங்குதலும் இத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளன.

இத்திட்டம் தொடர்பான பல்வேறு விமர்சனங்கள் அரசியல்ரீதியாகவும் தொழில்நுட்பரீதியாகவும் கிளம்பியுள்ளன. இந்த வீடுகள் வடக்கு கிழக்கின் சூழலுக்குப் பொருத்தமற்றவையென்றும், சுகாதாரக் கேடானவையென்றும், வீட்டுக்குள் மரபுரீதியான அடுப்புகளைக் கொண்டு சமையல் வேலைகள் செய்யப்பட முடியாதென்றும், இதனால் சாதாரண மக்கள் காஸ் அடுப்புக்காக அதிக செலவுகளை மேற்கொள்ள வேண்டியேற்படும் என்றும், இல்லையென்றால் தனியாக வெளியே ஒரு சமையலறையை கட்ட வேண்டும் என்றும், இந்த கட்டமைப்பு நீண்டகாலம் நின்று பிடிக்க முடியாத ஒன்று என்றும், பழுதுகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை திருத்துவதற்கு உள்ளூரில் வசதிகள் எதுவும் இல்லையென்றும், எல்லாவற்றுக்கும் மேலாக சூரிய வெப்ப காலம் அதிகமாகக் கொண்ட வடக்கு கிழக்கில் இந்த வீட்டுக்குள் மிகுந்த சிரமங்களுடனேயே வசிக்க நேரிடும் என்றும் கூறப்படுகிறது.

மேலும், இந்தளவு பெருந்தொகையான செலவுக்கு இதே அளவு வீட்டை மணல், கல்லு, சீமெந்து மற்றும் ஓடுகள் ஆகியவற்றைக் கொண்டு கட்டினால்:-

சூழலுக்குப் பொருத்தமான, சுகாதாரமான இரண்டு மடங்கு வீடுகளைக் கட்ட முடியுமென்றும்,

அதன் மூலம் வடக்கு கிழக்கில் உள்ள வீடில்லா நிலைமையை முற்றாக நீக்க முடியுமென்றும்,

அத்துடன் இவற்றைக் கட்டி முடிப்பதற்கான நேரடி கட்டிட வேலைவாய்ப்புகள் மூலம் சுமார் 15000 பேருக்கு தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு போதிய வருமானம் தரும் நிறைவான வேலை வாய்ப்புகளை வழங்க முடியுமென்றும் கூறப்படுகிறது.

இந்த வாய்ப்புகளை அரசாங்கத்தின் உருக்கு டப்பா வீடுகள் தர மாட்டா என தெற்கிலிருந்து வந்து ஆய்வுகள் செய்த நிபுணர்கள் குழு விமர்சிக்கிறது.

இந்த வீட்டுத் திட்டத்தை வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்த் தேசிய அரசியல் அமைப்புகளும், இடதுசாரிக் கட்சிகளும், சமூக சேவை நிறுவனங்களும், தமிழ்ப் பத்திரிகைகளும் கண்டிக்கின்றன. தெற்கிலிருந்தும் கடுமையான எதிர்ப்புகளும், விமர்சனங்களும் எழுந்த வண்ணம் உள்ளன. வடக்கு மாகாண சபை இதனை விமர்சித்து ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள் இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்யும்படி அரசாங்கத்தைக் கோரியுள்ளதாக பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.


இவையெல்லாவற்றையும் புறக்கணித்து விட்டு, புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதன் அவர்கள் இந்த உருக்கு வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீருவதென உறுதியான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவரின் கருத்துப்படி இத்திட்டத்தை எதிர்க்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் உள் நோக்கத்துடனேயெ எதிர்க்கிறது என்கிறார். இத்திட்டத்தின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களின் மத்தியில் பிரபல்யம் அடைந்து விடும் என்பதனாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்திட்டத்தை எதிர்க்கிறது என்கிறார்.

இத்திட்டத்தின் மொத்தச் செலவு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களாகும், அதாவது இலங்கை ரூபாயில் இது சுமார் 15000 கோடியாகும். இந்தத் தொகை எந்த நாட்டினாலும் நன்கொடையாக வழங்கப்படவில்லை. இந்தியாவின் வீட்டுத் திட்டம் முழுக்க முழுக்க இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்த வீட்டுத் திட்டத்துக்கான தொகை முழுவதையும் அரசாங்கம் வங்கிகளிலிருந்து கடனாகவே பெறுகின்றது. இதனை முழுமையாக திருப்பிச் செலுத்துவதற்கு அரசாங்கம் மொத்தத்தில் சுமார் 25000 கோடி ரூபா செலவு செய்ய நேரிடும். இந்தச் சுமையை இலங்கை மக்கள் அனைவருமே வரிகளாகச் செலுத்த வேண்டும்.

இந்தத் திட்டம் முழுவதுவும் ஒரே ஒப்பந்தத்தின் மூலம் பிரான்ஸை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் ஆர்செலர் மித்தல் கம்பனிக்கே வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆர்செலர் மித்தல் கம்பனியானது லண்டனை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் லஷ்மி மித்தல் குறூப் கம்பனிகளின் ஒரு பகுதியாகும். முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தின் பெரும் பாகங்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படும். இருப்பினும் தென்னிலங்கையில் உள்ள சில கட்டிட ஒப்பந்தகாரர்களும் இத்திட்டத்துக்கான உப ஒப்பந்தங்கள் மூலம் நன்மையடைவார்கள் என்பதுவும் உண்மையே.

வடக்கு கிழக்கு அரசியல் வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் உள்ளூர் கட்டிட ஒப்பந்தகாரர்களுக்கு கட்டிட வேலைகளை வழங்கி இத்திட்டத்தில் இருந்து உழைப்பதற்கான வாய்ப்புகள் இங்கு குறைவாகவே இருக்கும் என்பதுவும் கவனத்துக்குரியது. வடக்கு கிழக்கில் இருந்து எழும் எதிர்ப்புகளை சமாளிக்கும் நோக்குடன் வடக்கு கிழக்கு அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் திருப்திப்படும் வகையாக சிறு சிறு கட்டிட ஒப்பந்தங்களை முடிந்த அளவுக்கு அரசாங்கம் வடக்கு கிழக்கில் உள்ள கட்டிடத் தொழில் ஒப்பந்தகாரர்களுக்கும் பரவலாக வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த வீட்டுத் திட்டம் நல்லதா? கூடாததா? சரியானதா? பிழையானதா? என்பதையெல்லாம் விட இந்த வீட்டுத் திட்ட நன்மைகள் தங்களுக்கு கிடைக்காதா? என ஏங்கும் சாதாரண குடும்பங்களின் தொகை இங்கு பல்லாயிரம். இந்த வீட்டுத் திட்டம் மீதான விமர்சனங்கள் ஒரு பக்கம் சென்று கொண்டிருக்கிற அதேவேளை. இந்த வீட்டுத் திட்டத்தை கோரி ஏற்கனவே 50000க்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்து விட்டார்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.


உரும்பிராய், யோகபுரத்தில் பெண் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பொருத்து வீடு - அமைச்சர் சுவாமிநாதன்

இப்போது, இலங்கை அரசாங்கம் புனர்வாழ்வு அமைச்சினூடாக நேரடியாக 21 லட்சம் ரூபா பெறுமதியான 65000 வீடுகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப் போவதாகக் கூறி அதற்கான நடவடிக்கைகளிலும் தீவிரமாக இறங்கியுள்ளது. அதற்கான மாதிரி வீடுகளையும் யாழ்ப்பாணத்தில் கையளித்துள்ளது.

இந்தத் திட்டம் முழுவதுவும் ஒரே ஒப்பந்தத்தின் மூலம் பிரான்ஸை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் ஆர்செலர் மித்தல் கம்பனிக்கே வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆர்செலர் மித்தல் கம்பனியானது லண்டனை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் லஷ்மி மித்தல் குறூப் கம்பனிகளின் ஒரு பகுதியாகும். முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தின் பெரும் பாகங்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படும்.

வாழுவதற்கு அருகதையான வீடே இல்லாமல் ஒட்டுக் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் இந்த வீட்டுத் திட்டத்தை ஒரு வரப்பிரசாதமாக எண்ணுவது யதார்த்தமானதே. மேலும், இந்த வீட்டுத் திட்டத்துக்கு விண்ணபபித்து விட்டு எப்போது தமக்கு வீடு கிடைக்கும் எனக் காத்திருக்கும் வடக்கு கிழக்கு மக்கள் இந்த வீட்டுத் திட்டத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர்ப்புகளால் இந்த வீட்டுத் திட்டம் வடக்கு கிழக்கு மக்களுக்குக் கிடைக்காத வகையில், அரசாங்கம் இந்த எதிர்ப்புகளைக் காரணம் காட்டி இந்த வீடுகளை தென்னிலங்கை மக்களுக்குக் கிடைக்கும் வண்ணம் திசை திருப்பிவிடுமோ என அச்சம் கொண்டிருப்பதுவும் நியாயமானதே.

எனவே, வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களும் சமூகப் பிரமுகர்களும், தமிழ் புத்திஜீவிகளும், பத்திரிகையாளர்களும் வீட்டு வசதிக்காக ஏங்கிநிற்கும் மக்களின் ஆதங்கங்களையும் அபிலாஷைகளையும் கருத்திற் கொண்டே செயற்பட வேண்டும். அரசாங்கமும் இந்த விடயத்தில் பிடித்த முயலுக்கு மூன்று கால் என பிடிவாதம் செய்யாமல் நேர்மையான விமர்சனங்களையும் சரியான மாற்று யோசனைகளையும் கருத்திற் கொண்டு செயற்படுவது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. சிறிதரன் 294, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். அவர்களால் இல 78, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் கங்கை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.